பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 12

ஞாயிற்றுக்கிழமை
08 டிசெம்பர் 2024

கார்த்திகை 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## அல்வாயில் இளம் தாய் உயிரிழப்பு

யாழ். டிசெ. 8
யாழ்ப்பாணம் அல்வாயில் இளம்தாயொருவர் நேற்றுச் சனிக்கிழமை திடீர் 11



## யாழ்ப்பாணத்தில் பல வீடுகளில் 350 பவுண் நகைகளை களவாடியவர் சிக்கினார்

2 வருடங்களாகக் கைவரிசை
பொறிவைத்துப் பிடித்தது பொலிஸ்

11

## நாட்டரிசி 230 ரூபா ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, டிசெ. 8
ஒரு கிலோ நாட்டரிசியை 225 ரூபா மொத்த விலைக்கும் 230 ரூபா சில்லறை விலைக்கும் விற்பனை செய்யுமாறு ஜனாதிபதி அநுரகுமார அரிசி விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். 11

## கறுப்புப் பண மீட்புக்கு அமெ. உதவத் தயார்!

கொழும்பு, டிசெ. 8
கறுப்புப் பண மீட்பு உட்பட, இலங்கை அரசாங்கத்துக்கு அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. 11

# உள்ளூராட்சித் தேர்தல் மார்ச் மாத இறுதிக்குள்!

கொழும்பு, டிசெம்பர் 8
2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் இறுதியில் அல்லது ஏப்ரல் முதல் வாரத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. 11

## முள்ளிவாய்க்காலில் வெடிபொருள் மீட்பு!

### வெள்ளத்தால் வெளித்தெரிந்தன



முல்லைத்தீவு, டிசெ. 8
முள்ளிவாய்க்கால் பகுதியில் பெருமளவு வெடிபொருள்கள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
2009ஆம் ஆண்டு இறுதிப்போரின் போது விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டதாகக் கருதப்படும் வெடிபொருள்களே இவ்வாறு 11

## காணாமலாக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச விசாரணையே தேவை!

### அநுர அரசுக்கு உறவினர்கள் அழுத்தம்

யாழ்ப்பாணம், டிசெ. 8
வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் உள்ளகப் பொறிமுறையை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். சர்வதேச விசாரணையொன்றே இந்த விடயத்தில் எமது தீர்க்கமான முடிவு என்று வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான உறவுகளின் சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர். 11

30 ஆம் திகதிவரை தொடர்ச்சியாக

## யாழ்ப்பாணம் – கொழும்புக்கு குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில்

09

## மதுபானப் பத்திரங்களில் மோசடி இடம்பெறவில்லை

### அநுர தரப்புக்கு ரணில் பதிலடி

கொழும்பு, டிசெ. 8
கடந்த அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மதுபான சாலை அனுமதிப்பத்திரங்கள் எவையும் இரகசியமாகவோ அல்லது சட்டவிரோதமாகவோ வழங்கப்படவில்லை. அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்காகவே அந்த 11

# பூநகரிக்கு ஒதுக்கிய ரூ. 500 மில். மீளப்பெறப்படும் அபாயம்

கிளிநொச்சி, டிசெ. 8
பூநகரி நகரமயமாக்கல் திட்டத்துக்கு என அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 500 மில்லியன் ரூபா மீளத் திரும்பிச் செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வடமாகாணசபை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பூநகரி வாடியடி பகுதியை 11



முச்சந்தி முரளி

'பலநாள் பவுண் கள்ளனும் ஒருநாள் அகப்படத்தானே வேணும்'


## பெண் படுகொலை மூவர் கைதாகினர்

வவுனியா, டிசெ. 8
வெலிஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹடுகஸ்வெள பிரதேசத்தில் பெண்ணொருவரைச் 11

சஞ்சீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டிகை காலத்தில்

# முட்டை, இறைச்சிக்கு தட்டுப்பாடில்லை

கொழும்பு, டிசெ. 8
எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் முட்டை மற்றும் இறைச்சியை தட்டுப்பாடின்றி மக்களுக்கு வழங்க முடியும் என இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதம் வரை முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலையில் மாற்றம் மேற்கொள்ளப்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலங்களில் கோழி இறைச்சியின் விலையை ஆயிரம் ரூபாவுக்கும் குறைவாகவே பேண முடியும்.

எதிர்காலத்தில் முட்டை மற்றும் இறைச்சியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கு

# புதிய வேட்புமனு கோர ஜனவரியில் சட்டவரைபு

கொழும்பு, டிசெ. 8
**உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்குப் புதிதாக வேட்புமனு கோருவதற்குரிய சட்டவரைபு எதிர்வரும் ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.**

ஏற்கனவே பெறப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்து, புதிதாக வேட்புமனு கோருவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டத்தில் இதற்குரிய திருத்தங்கள் பற்றி சட்டமா அதிபரிடம் அரசாங்கம் ஆலோசனை கோரியுள்ளது. அந்தச் சட்ட விளக்கம் கிடைக்கப்பெற்ற பின்னர் ஜனவரி மாதம் அளவில் சட்ட திருத்த யோசனை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. தேர்தல் முறைமையிலோ அல்லது உறுப்பினர்கள் எண்ணிக்கையிலோ மாற்றம் வராது. வேட்பு மனுக்கள் மாத்திரமே புதிய ஏற்பாட்டின் பிரகாரம் இரத்துச் செய்யப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-44)

அடுத்த வருடம் முதல்

# மாணவர்களுக்கு தைத்த சீருடைகள்

கொழும்பு, டிசெ.8
அடுத்த வருடம் முதல் பாடசாலை மாணவர்ளுக்குத் தைக்கப்பட்ட சீருடைகளை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கைத்தொழில் மற்றும் தொழில்முனைவு அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி இந்த விடயத்தை தெரிவித்தார்.

பாடசாலைச் சீருடைக்கான துணிகளை வழங்கும்போது அதில் பெருமளவிலான துணிகள் வீணடிக்கப்படுகிறது. இதனால் மாணவர்களுக்குத் தைக்கப்பட்ட சீருடைகளை வழங்கும் தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# கடன் வசதிகளைப் பெறுவதே அரசாங்கத்தின் நோக்கம்

*நாட்டுக்கு ஆபத்தென சஜித் சுட்டிக்காட்டு*

கொழும்பு, டிசெ.8
அரசாங்கம் நாணயநிதியத்தின் அறிக்கைகளை ஆராயாமல், நீடிக்கப்பட்ட கடன் வசதிகளைப் பெறுவதற்காக மட்டுமே செயற்படுவது ஆபத்தானது. அதற்கமைய அதில் திருத்தங்களை மேற்கொண்டு புதிய இணக்கப்பாட்டை எட்டவேண்டும். அதற்கு நாங்கள் பூரண ஆதரவை வழங்கத் தயாராக இருக்கிறோம் .

-இவ்வாறு நாடாளுமன்றத்தில் இடைக்கால வாக்குப்பதிவு கணக்கறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போதைய அரசாங்கம் பெரும் மக்கள் ஆணையைப் பெற்று, நாட்டின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட சந்தர்ப்பத்தில் இந்த அரசாங்கம் மக்கள் ஆணையை மீறி மக்களின் உரிமைகளுக்கு துரோகம் இழைத்துள்ளது.

தற்போதைய அரசாங்கமும் முன்னாள் ஜனாதிபதியின் அடிச்சுவடுகளையே பின்பற்றி வருகின்றது. தற்போதுள்ள இணக்கப்பாடு பலவீனமானது. இதற்கு அப்பால் சென்று, திருத்தங்களை மேற்கொண்டு புதிய இணக்கப்பாட்டை எட்டவேண்டும். அதற்கு நாங்கள் பூரண ஆதரவை வழங்கத் தயாராக இருக்கிறோம் - என்றார். (ச-இ)



# எலிக்காய்ச்சல் நோயாளர்கள் உயர்வு

கொழும்பு, டிசெ.8
நாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 10 ஆயிரம் பேர் எலிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக நாட்டில் எலிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எலிக்காய்ச்சல் நோயினால் வருடத்துக்கு 120 முதல் 200 பேர் உயிரிழக்கின்றனர். எனவே, இந்த நோய் அறிகுறிகள் காணப்படுபவர்கள் உடனடியாக மருத்துவரை நாடுவது அவசியம் என சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# இந்திய முதலீட்டாளர்கள் யாழ்ப்பாணம் வருகை

*யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரி தகவல்*

யாழ்ப்பாணம்,டிசெ. 8
யாழ்ப்பாணத்துக்கு 15 இந்திய முதலீட்டாளர்கள் வருகை தரவுள்ளார்கள் என யாழ். இந்தியத் துணைத் தூதரக முதன்மை நிர்வாக அதிகாரி ராம் மகேஷ் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களம், யாழ். இந்தியத் துணைத் தூதரகம் இணைந்து நடத்தும் வடக்கு மாகாண தொழிற்றுறை வர்த்தகச் சந்தை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.

இந்த ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

உற்பத்திகளை சந்தைப்படுத்துகின்ற போதுதான் உள்ளூர் உற்பத்தி வளர்ச்சி அடையும். அதற்கு சந்தை வாய்ப்புகள், கண்காட்சிகள் உதவும். இதற்கு இந்தியத் தூதரகமானது பல்வேறுவிதமான உதவிகளை செய்து வருகிறது.

அந்த வகையில் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் பங்குபற்றுவதற்காக சுமார் 15க்கு மேற்பட்ட இந்திய முதலீட்டாளர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்கள். இதனை இங்குள்ள தொழில் முனைவோர் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-25)



# தலைமையை விட்டுத்தந்தால் ஐ.தே.க.வுடன் இணையலாம்


*ஐ.ம.சக்தி ஆணித்தரம்*

கொழும்பு, டிசெ. 8
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவி சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கப்பட்டால் மாத்திரமே இரு தரப்பு இணைவு சாத்தியமாகும். இதற்கான விட்டுக்கொடுப்பை ரணில் விக்கிரமசிங்க செய்யாதவரை இணைவு என்பது சாத்தியப்படமாட்டாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணையவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நானும் உள்ளேன். இந்த இணைவு உண்மையான இணைவாக இருக்கவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை பொறுப்பேற்குமாறு சஜித்துக்கு, ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுக்கவேண்டும். அவ்வாறு அல்லாமல் வெறுமனே பேசிக்கொண்டிருப்பதால் நடக்கப்போவது எதுவுமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44, 25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அத்தியாவசியப் பொருள்கள் பண்டிகையில் விலையுயர்வு

## பொதுமக்கள் கவலை

கொழும்பு, டிசெ.8

பண்டிகை காலம் நெருங்கும் நிலையில் அத்தியாவசிய பொருள்களின் உயர்ந்து காணப்படுவதோடு அவற்றுக்குத் தட்டுப்பாடும் நிலவுகின்றது என்று மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். ஒரு தேங்காய் 200 ரூபாவுக்கு மேல் விற்பனையாகி என்றது. நாட்டுக் குத்தரிசிக்குத் தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில் 280 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. சமையல் எரிவாயுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. நாளாந்த கூலி வேலைக்குச் செல்லுகின்ற தொழிலாளர்கள் தற்போது மழை காரணமாக தொழில்களும் இல்லாத நிலையில் பெரும் இடரைச் சந்திக்க நேரிடுகிறது. பண்டிகைக்காலம் நெருங்கும் நிலையில் அரசாங்கம் அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைத்துப் பொருள்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-33-113)

சீரற்ற காலநிலை

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 2,417 விவசாயிகள் பாதிப்பு

முல்லைத்தீவு,டிசெ. 8

**சீரற்ற காலநிலையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2ஆயிரத்து 417 விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைய நாள்களில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் நெற்பயிர்ச்செய்கை பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

அதன்படி 594 ஹெக்ரேயர் நிலப்பரப்பு முழுமையாக அழிவடைந்துள்ளதுடன் 594 ஹெக்ரேயர் நிலப்பரப்பு 75 சதவிகித அழிவையும் ஆயிரத்து 179 ஹெக்ரேயர் நிலப்பரப்பு 50 சதவிகித அழிவையும் 2ஆயிரத்து 158 ஹெக்ரேயர் நிலப்பரப்பு 25 சதவிகிதமான அழிவையும் எதிர்நோக்கியுள்ளது.

இதனால் 2 ஆயிரத்து 417 விவசாயிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-125)




# கிளிநொச்சியில் தொழிற்சந்தை

கிளிநொச்சி, டிசெ.8

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் இணைந்து நடத்தும் மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட பதில் மாவட்டச் செயலர் எஸ். முரளிதரன் தலைமையில் கிளிநொச்சி பழைய மாவட்டச் செயலக வளாகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட மட்டத்திலுள்ள தொழில் வழங்கும் தனியார் நிறுவனங்களை அழைத்து, தொழில் தேடுபவர்களையும், தொழில் வழங்குநர்களையும் இணைத்து தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக இந்த தொழிற்சந்தை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகவிவசாய பீடத்தின்பீடாதிபதிபேராசிரியர்.க.பகீரதன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர், ந.இன்பராஜ், மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ந.சந்தீபன், நகமா நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் இரா.சஞ்ஜெய் காந்தி ஆகியோர் பங்கேற்றனர். (ச-45-113)

# பிடியாணை ஐவர் கைது

யாழ்ப்பாணம்,டிசெ. 8

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஐவரை கோப்பாய் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

யாழ்.நீதிவான் நீதிமன்றில் வழக்குகளுக்குச் செல்லாது 7 வழக்குகளில் ஐவர் தலைமறைவாகியிருந்தனர்.

அவர்களுக்கெதிராக இரண்டு திறந்த பிடியாணை மற்றும் 5 திகதியிடப்பட்ட பிடியாணை நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்டது. அதற்கமைய பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இரு பாலை, செல்வபுரம், கோப்பாய் பகுதிகளில் வைத்து குறித்த ஐவரும் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு கோப்பாய் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ச-125)

# பெரும்பான்மைப் பலத்தில் தன்னிச்சை வேண்டாம்!

## தயாசிறி சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 8

பெரும்பான்மை உள்ளதால் அரசாங்கம் தன்னிச்சையாகச் செயற்பட வேண்டாம். எதிர்த்தரப்பில் 66 உறுப்பினர்கள் உள்ளார்கள். ஆகவே குறைபாடுகளை சுட்டிக்காட்ட இடமளியுங்கள் என்று எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் அதாவது 9.30 மணிக்கு முன்னர் சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைக்கலாம். இடைக்கால கணக்கறிக்கையை முன்வைக்கும் போது கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் இடைக்கால கணக்கறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. குறைநிரப்பு பிரேரணை முன்வைக்கப்பட்டு, நிறைவேற்றப்படாத பட்சத்தில் தான் இடைக்கால கணக்கறிக்கையை முன்வைக்க முடியும். அரச நிதி முகாமைத்துவச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏதும் பின்பற்றப்படவில்லை.

பெரும்பான்மை உள்ளதால் இந்த அரசாங்கம் தன்னிச்சையாகச் செயற்படுகிறது. ஆகவே குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதற்கு இடமளியுங்கள்- என்றார். (ச-இ)



# டெங்கை ஒழிப்பதற்கு யாழில் பொறிமுறை

யாழ்ப்பாணம் , டிசெ.8

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நுளம்பு பெருகாது தடுப்பதற்கு கிராம அலுவலர் பிரிவு ரீதியாகப் பொருத்தமான பொறிமுறை செயற்படுத்தப்படும் என்று யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

மழைக்குப் பின்னரான சூழலில் டெங்குப் பரவல் மிக வேகமாக அதிகரித்துள்ளது. அந்தவகையில் யாழ்.மாநகர சபை ஆணையாளர், நகர மற்றும் பிரதேசசபைகளின் செயலாளர்கள், பொது சுகாதார மருத்துவ அதிகாரிகள், கிராமமட்ட உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து யாழ்.மாவட்டத்தில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகப் பொருத்தமான பொறிமுறையில் டெங்கு ஒழிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இந்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தி அதன் முன்னேற்ற அறிக்கையை எதிர்வரும் 16 ஆம் திகதி சமர்ப்பிக்கவேண்டும் என்றும் பிரதேச செயலாளர்களுக்கு மாவட்டச் செயலர் அறிவுறுத்தினார். (ச-22,66)


# 'அஸ்வெசும' விண்ணப்பம் மக்களுக்கான அறிவிப்பு

அஸ்வெசும திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் தொடர்பான பொது மக்களுக்கான அறிவித்தலொன்றை யாழ். மாவட்ட செயலகம் வெளியிட்டுள்ளது.

தற்போது நலன்புரி நன்மைகள் திட்டத்தின் (அஸ்வெசும) இரண்டாம் கட்டத்துக்கான விண்ணப்பங்கள் மீண்டும் கோரப்பட்டுள்ளன. எனவே அஸ்வெசும நலன்புரி நன்மைகள் தொடர்பாக விண்ணப்பிக்காதவர்கள் மற்றும் முதலாம் கட்டத்தில் விண்ணப்பித்தும் வீடுகளுக்கு அலுவலர்கள் வருகை தந்து தரவுகள் சேகரிக்கப்படாதவர்கள் மற்றும் தகவல் சேகரிக்கப்பட்டும், நலன்புரி நன்மைகள் சபையின் தரவுத்தளத்தில் தகவல்கள் பதிவேற்றப்படாதவர்கள் கிராம அலுவலர் அலுவலகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் டிசெம்பர் 9 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்க முடியும்.

இத்திட்டம் தொடர்பான மேலதிக விளக்கங்களை தமது பிரதேச செயலக நலன்புரி நன்மைகள் சபை அலகினை தொடர்பு கொள்வதன் மூலம் மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-20-27,66-)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உபகரணங்கள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.8
அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் குருநகரிலுள்ள கடற்றொழிலாளர்களின் தொழில்கள் பாதிக்கப்பட்டு, வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ள 138 மீனவக் குடும்பங்களுக்கு தொழில் முயற்சி மேற்கொள்வதற்காக கடற்றொழில் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.
நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 15 இலட்சம் ரூபா குருசாமி சுரேந்திரனின் சிபாரிசில் இவ்வாறு வழங்கப்பட்டது. (ச-45-20)

# வரணிவயல்வெள்ளத்துக்கு தடுப்பணை காரணம் அல்ல

## மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், டிசெ.8
**வரணியில் உள்ள வயல் நிலங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளமைக்கும், தொண்டைமானாறு தடுப்பணையின் நீர்மட்டத்துக்கும் நேரடித் தொடர்புகள் இல்லை என்று வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் எந்திரி ந.சுதாகரன் தெரிவித்துள்ளார்.**

தொண்டைமானாறு தடுப்பணை மூடி வைக்கப்பட்டுள்ளதால் தங்களின் வயல் நிலங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று கடந்த வியாழக்கிழமை வரணி, நாவற்காடு கிராம விவசாயிகள் போராட்டம் நடத்தியிருந்தனர். தொண்டைமானாறு தடுப்பணை மூடிவைக்கப்பட்டுள்ளதால் வரணிப் பிரதேச வயல்களில் தேங்கி நிற்கும் மேலதிக நீர் வடிந்துசெல்ல முடியாதுள்ளது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.
இதுதொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
யாழ். குடாநாட்டின் நீரேரிகள் ஊடாக உவர்த்தன்மை உட்புகுந்து நிலத்தடி நீர் பாதிப்படையாது பாதுகாப்பதில் தொண்டைமானாறு தடுப்பணை போன்ற தடுப்பணைகள் பெரும்பங்கு வகிக்கின்றன. கடந்த வாரங்களில் தாழமுக்கம் காரணமாக அதிக மழை வீழ்ச்சி கிடைத்த சந்தர்ப்பத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தொண்டைமானாறு தடுப்பணை ஊடாக நீர் திறந்து விடப்பட்டு வெள்ளப்பாதிப்பைத் தவிர்ப்பதற்காக கடல் மட்டத்திலிருந்து 2 அடி 6 அங்குல உயரத்திலும் குறைவான மட்டத்திலேயே நீர் மட்டம் பேணப்படுகின்றது.
வரணிப் பகுதியின் வயற்காணிகளில் மேற்கொள்ளப்பட்ட நேரடிக் கள ஆய்வுகளில் வயற்காணிகளில் 4 அடி அளவிலேயே வெள்ள நிலை காணப்படுகின்றது. அதற்கு அந்தக் காணிகளின் தாழ்வான தரைத்தோற்றம் காரணமாக இருப்பினும், கடந்தகாலங்களில் மேற்கொள்ளப்பட்ட குறுக்கு வீதிகளின் அபிவிருத்தியும், போதிய நீரோட்டத்துக்குத் தேவையான மதகுகள் அமைக்கப்படாமையும், வயல் நிலங்களின் தரைத்தோற்றத்தில் காணி உரிமையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட அனுமதியற்ற தரை மட்ட மாற்றங்களும் தடுப்பணைக்கான நீர் வரத்து வீதத்தைக் குறைத்து வெள்ள நிலைமையை அதிகரித்துள்ளது.
நீரோட்டத்தைப் பாதிக்கக்கூடிய வீதி அபிவிருத்திகள் மற்றும் சட்ட அனுமதியற்ற தரைத்தோற்ற மாற்றங்கள் அடையாளப்படுத்தப்பட்டு சீர் செய்யப்படுவதன் ஊடாக இந்த வெள்ள நிலைமையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுடன், சில பிரதேசங்கள் இயற்கையாக நீர் வழிந்தோட முடியாத தரைத்தோற்றத்தைக் கொண்டுள்ளமையால் அவற்றில் வெள்ளம் தேங்கும் நிலைமை தவிர்க்க முடியாதது.
தொண்டைமானாறு தடுப்பணைக் கதவுகள் தடுப்பணைக்கான நீர் வரத்து மற்றும் கடல்மட்ட மாறுபாட்டுக்கு அமை ו வினைத்திறனுடன் இயக்கப்பட் ுக் கொண்டிருப்பதை நான் உறுதி செய்கின்றேன் - என்றுள்ளது. (எ-66)





மன்னார் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஜீவபுரம் கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 20 குடும்பங்களுக்கு சுஷி பணப் பரிமாற்ற நிறுவனத்தால் உலருணவுப் பொதிகள் கடந்த வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (ரி-56)

# உதவிகள் கிடைக்கவில்லை ஆத்தியடி மக்கள் கவலை

யாழ்ப்பாணம், டிசெ.8
கொடிகாமம் - கச்சாய், ஆத்தியடிக் கிராமத்தில் 80 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் தமக்கு யாருமே வந்து உதவி செய்யவில்லை எனவும் சாவகச்சேரிப் பிரதேசசபையினர் வெள்ளம் வெளியேற நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.
அரசாங்கத்தாலும் எமக்கு உதவி கிடைக்கவில்லை. அதேவேளை இந்தப் பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளதால் வீடுகளில் வசிக்க முடியாது 80 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-33-159)

# கள் உற்பத்தி மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.8
யாழ். மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் சீவல் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். பனை, தென்னை மரங்களிலிருந்து பெறப்படும் கள்ளின் உற்பத்தி மழையால் வெகுவாக குறைவடைந்துள்ளது. இதனால் ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளே தவறணைகளில் விற்கப்பட்டு வருகிறது.
எனவே எமது வாழ்வாதாரப் பாதிப்புக்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். (ச-33-17)

# தொழிற்பயிற்சி விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி,டிசெ.8
கிளிநொச்சி இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையில் தொழிற்பயிற்சி விரிவுரையாளர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.
அதற்கமைய மோட்டார் சைக்கிள் மற்றும் ஆட்டோ திருத்துநர், குடிசார் படவரைஞர், வளிசீராக்கலும் குளிரூட்டலும் விரிவுரையாளர் மற்றும் அலுமினியக் கட்டுமான விரிவுரையாளர் போன்றவற்றுக்கான வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இதற்கமைய மேற்படி துறைசார் பயிற்சிகளில் NVQ -5அல்லது NVQ- 4 சான்றிதழ்களுடன் ஒரு வருடத்துக்கு மேற்பட்ட பயிற்சி அல்லது தொழில் அனுபவம் இருத்தல் வேண்டும். இதற்குத் தகுதியானவர்கள் 'உதவிப்பணிப்பாளர், இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை, மாவட்டப் பணிமனை, 155ஆம் கட்டை, கிளிநொச்சி' எனும் முகவரிக்கு எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் அனுப்பிவைப்பதுடன், கடித உறையின் இடது பக்கத்தில் 'விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பக்கோருகை 2024' எனக் குறிப்பிடவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் இரா. அகிலன் தெரிவித்துள்ளார். (ச-33-10)

# உதவிப்பொருள்கள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.8
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரும் விதை அனைத்தும் விருட்சமே அமைப்பினரும் இணைந்து,வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு உதவிப்பொருள்களை வழங்கி வைத்தனர். வருத்தப்படாத வாலிப சங்கத்தினர் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான 100 உலர் உணவுப் பொதிகளையும் 50 நுளம்பு வலைகளையும் மற்றும் 'விதை அனைத்தும் விருட்சமே' அமைப்பினர் 50 நுளம்பு வலைகளையும் வழங்கி வைத்தனர். (ச-25, 9)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொழிற்கற்கை கிளிநொச்சியில்

கிளிநொச்சி, டிசெ.8
இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையால் கிளிநொச்சியில் புதிய கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன. கரைச்சிப் பிரதேசத்தில் அழகுக் கலை (NVQ IV), கணினி வன்பொருள் (NVQ IV), கணினி வடிவமைப்பு (NVQ IV), ஆடை வடிவமைப்பு (NVQ IV), கணினித் தகவல் தொடர்பாடல் (NVQ IV), அலுமினியம் கட்டுமானம் (NVQ IV) ஆகிய கற்கை நெறிகளும், பளைப் பிரதேசத்தில் கணினித் தகவல் தொடர்பாடல் (NVQ IV), வீட்டு மின்னிணைப்பு(NVQ IV)ஆகிய கற்கை நெறிகளும், கண்டாவளைப் பிரதேசத்தில் ஆடை வடிவமைப்பு (NVQ IV), ஆட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் திருத்துநர் (NVQ IV) ஆகிய கற்கை நெறிகளும் ஆரம்பாகவுள்ளன என கிளிநொச்சி மாவட்ட இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை உதவிப் பணிப்பாளர் இரா. அகிலன் தெரிவித்துள்ளார். (ச-33-10)

# சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் பள்ளிப்பருவத்தில் போதிக்குக

## மன்னார் மாவட்டச் செயலர் தெரிவிப்பு

மன்னார், டிசெ. 8
**தற்போதைய மற்றும் எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்வை அச்சுறுத்தும் ஏராளமான சுற்றுச்சூழல் சவால்களை உலகம் எதிர்கொள்கின்றது. அந்தவகையில் சூழல் மாசடைதல் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மாணவர்களுக்கு பாடசாலை மட்டத்திலிருந்து கற்றுக் கொடுக்கவேண்டும் என்று மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

யு.என்.டி.பி நிறுவனத்தால் மன்னாரில் முன்னெடுக்கப்படும் சுற்றுச்சூழல் தொடர்பான அபிவிருத்தித் திட்டங்கள் மீளாய்வுக்கூட்டம் அண்மையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-
பிளாஸ்ரிக் பொருள்கள் மற்றும் கழிவுகளைக் கண்ட இடங்களில் வீசாது அவற்றை உரிய இடத்தில் போடுவது குறித்து பாடசாலை மட்டங்களில் இருந்து மாணவர்கள் பழகவேண்டும். மரங்களை நடுதல், இயற்கைப் பசளைகளை பயன்படுத்துதல், குப்பைகூழங்கள் எரிப்பதை தவிர்த்து மண்ணினுள் புதைத்தல், உக்காத பொருள்களை பொருத்தமான முறையில் அகற்றுதல், பொலித்தீன் பயன்பாட்டைத் தடை செய்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம் சூழல் மாசடைவதை தடுக்கலாம் என்பதை மாணவப் பருவத்திலேயே விழிப்புணர்வூட்டி புகட்டினால் ஆரோக்கியமான சிறந்த சந்ததியை உருவாக்கலாம்- என்றார். (ச-33-60)





# செயலமர்வு

கிளிநொச்சி, டிசெ.8
சுதேச மருத்துவத் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் சமூக மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான ஐந்து நாள் செயலமர்வு சுதேச மருத்துவ முறைக்கான தேசிய நிறுவனத்தின் யுனானி மருத்துவப்பிரிவின் ஏற்பாட்டில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிதி அனுசரணையில் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது.
ஆரம்ப நிகழ்வு சுதேச மருத்துவமுறைக்கான தேசிய நிறுவனத்தின் யுனானி மருத்துவப்பிரிவின் வைத்தியர் அமுதினி சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. (ச-45-113)


# மரண அறிவித்தல்

தோற்றம்
21 . 02 . 1948



மறைவு
07 . 12 . 2024

## சாந்தலிங்கம் கனகரெட்ணம்

(உரிமையாளர் யாழ் கூல்பார்)


யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஒடைலேனை வசிப்பிடமாகவும் தற்போது 166 நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தலிங்கம் கனகரெட்ணம் அவர்கள் நேற்று (07.12.2024) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சாந்தலிங்கம்-திருமலர்நாயகி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம்-யோகதேவி தம்பதியினரின் அன்பு மருமகனும், தேவிகாராணியின் பாதசமிகு கணவரும், வாசுகி, சுமங்கலி, ஸ்ரீராம், சந்திரிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் முரளிதரன், கருணாருந்தன் ஆதனா, ருஷான் ஆகியோரின் அன்பு மாமனாரும் துவாரகா, நிவேதா, விதுஷா நிதுஷன் அப்ஷான், அல்தாப், சஸ்னா, தனிஷ், தசானா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 03.00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

166, நாவலர் வீதி
ஐந்து சந்தி
யாழ்ப்பாணம்

தகவல்: குடும்பத்தினர்.
077 314 4510, 077 360 4328

CS 315 V-1



# வர்த்தகர் கிருபாவுக்கு அஞ்சலி

அண்மையில் மறைந்த பிரபல தொழிலதிபரும் சமூக சேவையாளருமான கிருபாகரனின் அஞ்சலி நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். கோண்டாவிலில் அமைந்துள்ள பி.சி.ஐ. கல்லூரியில் இடம்பெற்றது. ஈழ சினிமாக் கலைஞர்கள் சார்ந்து செயற்படும் குவியம் ஊடகம் மற்றும் 'வெற்றா காலேஜ் இன்ரர்நஷனல்' ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன. இதில் சினிமாக் கலைஞர்கள், அமரர் கிருபாகரனின் நண்பர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
குறித்த அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்ட மூத்த நடிகரும், இளைப்பாறிய வங்கி முகாமையாளருமான மகேந்திரசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், சமூகசேவையாளர் கிருபாகரன் தனக்காக மட்டும் வாழாமல் தான் சார்ந்தவர்களுக்காகவும், சமூகத்துக்காகவும் குறிப்பாக ஈழ சினிமாவின் வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்டவர். அந்த வெற்றிடத்தை ஈழ சினிமாக் கலைஞர்கள் நன்கு உணர்வார்கள்- என்றார். (ச-22,33,26,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ‘அறிவு நூல்’ வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ.8

காவேரி கலா மன்றம் மற்றும் தாய்நிலம் பதிப்பகம் இணைந்து நடத்தும், மறைந்த கவிஞர் க.பே.முத்தையா எழுதிய ‘தமிழ் அறிவு’ நூல் வெளியீட்டு விழா பட்டதாரி கற்கை நிலையப் பேராசிரியர் எஸ்.சண்முகதாஸ் தலைமையில் யாழ். போதனா மருத்துவமனைக்கு முன்பாக அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-45-27)



# சேர். பொன்.இராமநாதன் குருபூசை தின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.8

சைவப் பெருவள்ளலார் சேர். பொன். இராமநாதனின் 94 ஆவது சிரார்த்த தின குருபூசை நிகழ்வு துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள சேர். பொன். இராமநாதன், ஆறுமுக நாவலர் சிலைகளுக்கு மலர் மாலைகள் அணிவித்து தீபாராதனை இடம்பெற்றது.

நிகழ்வில் பேரவை உறுப்பினர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் சைவசமய அபிமானிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-45-20-26)

# விண்ணப்பம் கோரல்

*யாழ்ப்பாணம், டிசெ.8*

*தீவக வலயத்துக்குட்பட்ட வகை-3 பாடசாலைகளான வேரப்பிட்டி ஸ்ரீ கணேச வித்தியாலயம் மற்றும் புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி த.க. வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான நிபந்தனைகளாக விண்ணப்பதாரி இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களாக இருப்பதோடு, ஆகக்குறைந்தது 3 வருடங்களாவது சேவையாற்றக் கூடிய வயதெல்லையைக் கொண்டிருத்தல்வேண்டும்.*

*விண்ணப்பப்படிவங்களை தீவகக் கல்வி வலய நிர்வாகப் பிரிவில் பெற்று பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தீவகம், குறிகட்டுவான் வீதி, வேலணை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ச-45-10)*

# ஹனுமத் ஜெயந்தி பெருவிழா

யாழ்ப்பாணம், டிசெ.8

இணுவில் மருதனார்மடம், சுன்னாகம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயிலின் ஹனுமத் ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழா எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 30ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது.

தினமும் காலை 8 மணிக்கு அபிஷேகமும், 9.30 மணிக்கு பூஜை, அர்ச்சனை, ஹோமமும், 11 மணிக்கு இசை ஆராதனையும், தினமும் மாலை 4 மணிக்கு அபிஷேகமும், 5 மணிக்கு பூஜை, அர்ச்சனை, ஹோமமும் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இலட்சார்ச்சனை பூர்த்தி விழாவும், 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு அபிஷேகமும், காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும்,காலை 9மணிக்கு தேர்ப் பவனியும், மாலை 4.30 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம் மற்றும் பஞ்சமுக அர்ச்சனையும், 30ஆம் திகதி திங்கட்கிழமை ஹனுமத் ஜெயந்தி தினத்தில் காலை 6 மணிக்கு சங்கல்ப்பமும், மு.ப. 10.30 மணிக்கு 108 கலச அபிஷேகமும், மு.ப. 11 மணிக்கு ஆன்மீக உரையும், நண்பகல் 12 மணிக்கு சந்தன அலங்காரப்பு பூஜையும், பிரசாதம் வழங்கலும் நடைபெறும் என ஆதீனக் கர்த்தா சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள் தெரிவித்துள்ளார். (ச-45-10)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தாய்வழி உறவில் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர் மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**இடபம்:** சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய டிசைனில் ஆடைகள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மிதுனம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. உங்கள் தேவையை அறிந்து மற்றவர்கள் உதவி செய்வார்கள்.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தை வழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பாராத பணவரவும், திடீர் செலவுகளும் ஏற்படக் கூடும். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**துலாம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகளால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். சிலருக்குக் குடும்பம் தொடர்பான வேலையை முன்னிட்டு வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நாள். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். பிற்பகலுக்கு மேல் உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். முக்கியமான பிரமுகர்களின் அறிமுகம் கிடைப்பதுடன், அவர்களால் ஆதாயமும் கிடைக்கும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**மகரம்:** பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு திடீர் பணவரவுக்கும், திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்ப விஷயமாக சிலருக்கு வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**மீனம்:** செலவுகளில் திட்டமிடல் அவசியம். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்படும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வாழ்க்கைத் துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

புலன்கள் நம்மைத் தோல்வியடையச் செய்யும் இடத்தில், பகுத்தறிவு அடியெடுத்து வைக்க வேண்டும்.

- கலிலியோ கலிலி -

# சிறார் உளநலனை உறுதிப்படுத்தல் அவசியம்

இலங்கையில் விளம்பர நடவடிக்கைகளுக்காக 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்படுகின்றது என்றும், ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்தத் தடை நடைமுறைக்கு வரும் எனவும் அறிவித்திருக்கின்றது ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம். ஆட்சியைப் பொறுப்பேற்ற நாள்முதல் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சிறுவர்களின் பாதுகாப்பையும், அவர்களின் உளநலன்களையும் மையப்படுத்தி பல்வேறுபட்ட சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதில் இரண்டாவது கருத்தில்லை. அரசாங்கம் என்பதற்காக அதன் அத்தனை திட்டங்களையும் எதிர்க்க வேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை. அந்த வகையில் சிறுவர்களுக்கான உலகைக் கண்டடைவதில் - உறுதிப்படுத்துவதில் அநுர அரசாங்கம் கொண்டிருக்கும் அக்கறை அளப்பெரியது. அந்த அக்கறையின் மற்றொரு வெளிப்பாடுதான் சிறுவர்களை விளம்பரங்களுக்குப் பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட தடை.

ஆரம்பத்தில் நாணயங்களால் மட்டுமே நெய்யப்பட்டிருந்த வர்த்தக உலகம், தற்போது அதன் வரையறையை எக்கச்சக்கமாகத் தாண்டியுள்ளது. அபத்தமான கவனக்குவிவு, உணர்ச்சி ரீதியான தாக்கங்கள், போலி வாக்குறுதிகள் இவையெல்லாம் இணைந்ததுதான் விளம்பரங்கள் என்றாகிவிட்ட காலமிது. இத்தகைய 21ஆம் நூற்றாண்டுக்கான விளம்பர உலகில் சிறுவர்கள்தான் சந்தையைத் தீர்மானிப்பவர்களாக இருக்கின்றனர் என்றால், அதை உங்களால் மறுக்க முடியுமா? ஆனால், அதுதான் உண்மை.

சிறுவர்கள் இல்லாத விளம்பரங்களைக் காண்பது இன்று இல்லையென்றாகிவிட்டது. ஒவ்வொரு வீடுகளிலும் இருக்கக்கூடிய சிறுவர்கள்தான் இந்த வணிகங்களின் பிரதான இலக்கு. இன்று உணவுப் பொருள்கள் முதல் ஆடை அலங்கார ஆபரணங்கள் வரை அனைத்து விளம்பரங்களிலும் ஏதோவொரு வகையில் சிறுவர்களின் வகிபங்கு இருக்கின்றது. சிறுவர்களின் நுகர்வுக்கு அப்பாற்பட்ட விடயங்களில் கூட சிறுவர்கள் விளம்பரப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். 'சிறுவர்கள் சொன்னால் நம்பகத்தன்மை அதிகரிக்கும்' அல்லது 'சிறுவர்கள் அந்தப் பொருளை அல்லது உணவைக் கொள்வனவு செய்வதற்கு தம் பெற்றோரை, உறவினர்களைத் தூண்டுவார்கள்' என்ற எண்ணமே இதற்குக் காரணம். இந்த மந்திரத்தில்தான் இன்று ஏகப்பட்ட வர்த்தகங்கள் - விளம்பரங்கள் இயங்கிக் கொண்டிருக்கையில், அதற்குத் தடைபோட்டிருக்கும் அநுர அரசாங்கத்தின் முடிவும், துணிவும் பாராட்டப்படவேண்டியது.

வெறுமனே பரீட்சைகள் மட்டும் இன்று சிறுவர்களுக்கும், குழந்தைகளுக்கும் மன அழுத்தத்தை வழங்கவில்லை. இவ்வாறான விடயங்களும் அவர்களின் உளநலனில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே, சிறுவர்களின் உளநலனைப் பாதுகாப்பதிலும் - பேணுவதிலும் கண்துடைப்பாக அன்றி ஆத்மார்த்தமான அக்கறையைக் கொண்டிருப்பதையே அநுர அரசாங்கத்தின் இந்த முடிவு வெளிப்படுத்துகின்றது. இதுபோன்ற ஆரோக்கியமான தீர்மானங்கள் எதிர்கால சந்ததியை இன்னும் வளமாக்கும், பலமாக்கும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




வடக்கு - கிழக்கில்

## 200 பல்கலை மாணவர்களுக்கு இந்தியப் புலமைப்பரிசில்கள்

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ். பல்கலைக்கழகத்திலும், கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்று வரும் பொருளாதார ரீதியாக நலிவுற்ற 200 மாணவர்கள் இந்திய அரசால் நடைமுறைப்படுத்தப்படும் புலமைப்பரிசில் திட்டத்துக்கு இந்த வருடம் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவால் வருடாந்தம் 710 இலங்கை மாணவர்களுக்கு இந்தியத் தூதரகம் புலமைப்பரிசில்களை வழங்கி வருகின்றது. மருத்துவம்,பொறியியல், மனித வளங்கள் போன்ற துறைகளில் கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கே இந்தப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் கொள்வனவு, உணவு, தங்குமிடம், களவிஜயங்கள் போன்றவற்றை ஈடு செய்யும் வகையில் இந்தப் புலமைப்பரிசில்கள் ஆண்டு தோறும் வழங்கப்படுகின்றன. (ரி-6)

## சுங்கத்திணைக்களம் டிஜிற்றல் மயமாக்கம்

கொழும்பு, டிசெ.8

சுங்கத்திணைக்களத்தின் நடவடிக்கைகள் டிஜிற்றல் மயப்படுத்தப்படவுள்ளதாக சுங்கத்திணைக்களப் பேச்சாளர் சீவலி ஆறுகொட தெரிவித்துள்ளார். குறிப்பாக வாகன இறக்குமதி தொடர்பான நடவடிக்கைகளும், சரக்குகள் கையாளும் நடவடிக்கைகளும் டிஜிற்றல் மயப்படுத்தப்படவுள்ளதாக சீவலி ஆறுகொட தெரிவித்துள்ளார். இதன்மூலம் ஒரு வாகனத்தின் செசி இலக்கத்தைப் பதிவு செய்வதனூடாக அந்த வாகனம் சட்டபூர்வமாக இறக்குமதி செய்யப்பட்டதா என்பதை அறிந்து கொள்ளலாம் எனவும் தெரிவித்தார். (ரி-6)

## சிறைகளில் ஸ்கானர்கள்

கொழும்பு, டிசெ.8

சிறைச்சாலைகளில் உடலைப் பரிசோதிக்கும் ஸ்கானர்கள் பொருத்தப்படவுள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளரும், சிறைச்சாலை ஆணையாளருமான காமினி திஸாநாயக்க தெரிவித்துள்ளார். அண்மையில் பூசா சிறைச்சாலையில் கைபேசி ஒன்று மீட்கப்பட்டதாக வெளிவந்த செய்திகளையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ரி-6)

## ஆசிய கிரிக்கெட் சபை தலைவராக ஷம்மி



கொழும்பு, டிசெ.8

ஆசிய கிரிக்கெட் சபையின் தலைவராக இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பல வருடங்களாக ஆசிய கிரிக்கெட் சபையின் நிதி மற்றும் சந்தைப்படுத்தல் குழுவின் தலைவராகச் செயற்பட்டு வந்துள்ளார். முன்னதாக, ஆசிய கிரிக்கெட் சபையின் தலைவராக இந்தியாவின் ஜெய்ஷா இருந்தார். சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவராக கடந்த வாரம் ஜெய்ஷா பதவியேற்றதை அடுத்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-இ)

## லொஹானுக்கு விளக்கமறியல்

கொழும்பு, டிசெ.8


மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹானை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. அளுத்கடை பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோதே அவரை நாளை திங்கட்கிழமை வரை தடுப்புக்காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

நாளை
திங்கட்கிழமை - கார்த்திகை - 24
09.12.2024
சுபநேரம் : 12.18 - 01.48
ராகுகாலம் : 07.48 - 09.18

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 05 . 1939



மறைவு 07 . 12 . 2024

## முருகுப்பிள்ளை மருதபிரான்

(ஓய்வு- பிரதம லிகிதர் பொலிஸ் திணைக்களம்)

அல்வாய் மேற்கு திக்கத்தை பிறப்பிடமாகவும் புலோலி மேற்கு புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை மருதபிரான் அவர்கள் நேற்று (07.12.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவதாஸ் (ஆசிரியர், யா/ சென்றோக்ஸ் றோ.க. வித்தியாலயம்), ஜெயதாஸ் (லண்டன்), மதிதாஸ் (ஆசிரியர் யா/ புலோலி மெ.மி.த.க. பாடசாலை), ரவிதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சுஜீவா (மாகாண ஆணையாளர், மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களம்), கமலினி (கொழும்பு), யோகலதா, ஊர்மிலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சாருஜன், காருணிகா, அஸ்வினியா, யஸ்மிதன், தர்மிகா, அஸ்வின், பிருத்தி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பி.ப. 01.00 மணியளவில் ஆனைவிழுந்தான் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
சிவதாஸ் : 077 629 3831
ஜெயதாஸ் : 0044 7476810657
மதிதாஸ் : 077 922 1174
ரவிதாஸ் : 0044 7482734525

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 1997) P-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 03 . 1934



மறைவு 04 . 12 . 2024

## கணபதி கிருஷ்ணர் (வண்டர்)

அச்சுவேலி தெற்கு விக்கினேஸ்வரா வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி கிருஷ்ணர் (வண்டர்) அவர்கள் கடந்த (04.12.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், செல்லையா - வெள்ளையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், திலகவதி அவர்களின் பாசமிகு கணவனும், கந்தையா, செல்லையா, வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரி, இராசேஸ்வரி, மனோன்மணி, தட்சணாமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், குகனேரியப்பன் (நோர்வே), கலாயினி (சுவிஸ்), நளாயினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தநாயகி, இரவீந்திரன், நந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், பானுஷா, பவித்திரா, நிரூஷா, நிறோஜன், ராகவி, பிரணித், ஜக்சவி, துஷாந்தன், சாருஜன், சாணவி ஆகியோரின் அன்புப் பேரனும், அகரன், அருவி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அச்சுவேலி தெற்கு விக்கினேஸ்வரா வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விக்கினேஸ்வரா வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல் :
குடும்பத்தினர்
சி.திலகவதி (மனைவி)
021 223 2447

(CR/43855) J-1

# மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 02 . 1970



இறப்பு 30 . 11 . 2024

## அருட்செல்வம் சிவராணி (சிவனேஸ்வரி)

புலோலி, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட (10 Kingsmead Avenue NW9 7NL) அருட்செல்வம் சிவராணி அவர்கள் கடந்த 30.11.2024 சனிக்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - சிவயோகம் தம்பதியரின் மகளும், இராசதுரை - ஞானாம்பிகை தம்பதியரின் மருமகளும், அருட்செல்வத்தின் அன்பு மனைவியும், கஜிபன், கோபிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், அஜித்குமார் அவர்களின் அன்பு மாமியாரும், ஜெயக்குமார் (UK), சுகுமார் (இலங்கை), சந்திரபாலா (இலங்கை), காலஞ்சென்ற றேணுகாதேவி (இலங்கை), ரவீந்திரகுமார் (ஜேர்மனி), கலாபவானி (இலங்கை), பவளராணி (இலங்கை), காலஞ்சென்ற இராஜகுமார் (UK), சந்திரகாந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான இரகுபதிராஜா சிறீறங்கநாதன் (இலங்கை), சுதந்திராதேவி மற்றும் சுசிலாதேவி (இலங்கை), ஜெயந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், இவரின் பிரிவால் துயருறும், ரஞ்சன் குடும்பம் மற்றும், மைத்துனர்கள், மைத்துனிமார்கள், மருமக்கள், மருமகன்கள், பெறாமக்கள், பேரன்கள் பேர்த்திகள் ஆகியோரையும் கொண்டவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகை நாளை (09.12.2024) திங்கள்கிழமை The Church of the Ascensions (Beaufort Road, Hanger hill, Ealing W5 3EB) என்ற இடத்தில் லண்டன் நேரப்படி மு.ப 10:30 மணியளவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பு இலக்கம்
செல்வம் - 0044 75 995 46853 , தர்ஷன் - 0044 75 458 00069
ரஞ்சன் - 0044 78 619 19243 , யஸ் - 0044 74 714 20062
அஜித் - 0044 74 053 93399

தகவல்:
குடும்பத்தினர்

(CS/1985) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மார்க்கண்டு உதயகுமார்**
(புத்தூர் உபதபால் ஊழியர்)
தோற்றம்
24.12.1956

**உதயகுமார் வசந்திமாலா**
(நீர்வேலி மேற்கு, 4ஆம் மைல், இராஜவீதி, நீர்வேலி)
தோற்றம்
08.02.1966

இறைவன் அடியில் : 08.12.2011

**மறக்க முடியுமோ ?**

பார்த்திருக்கவே பதின்மூன்று ஆண்டுகள் கடந்து போச்சு
எங்கள் நெஞ்சிலே வாழும் தெய்வங்களே
எங்களைப் பெற்றவர்களே
உறவுகள் என்று பாசம் வைக்கவே
வேஷம் போட்டு வீழ்த்தினார்களே
எப்படி மறப்பது ? எதை மறப்பது ?
நினைக்கவே இரத்தம் கொதிக்குதே
நீங்கள் உண்மையாய் வாழ்ந்தீர்கள்
இறைவனிடம் சென்றீர்கள்
பாவிகள் செய்ததை இறைவன் பார்த்திடுவான்
உங்களை நினைத்து வணங்கியபடியே வாழ்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியுற உள்ளத்தால் வேண்டுகின்றோம்.
என்றும் உம் நினைவுடன் வாழும் குடும்பத்தார்...!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிள்ளைகள் :
செந்தூரன் (பிரான்ஸ்), குகதீபன் (கனடா),
சங்கீதன் (கனடா), கோபிகா (கனடா)

(CS/56865) J-1




## கூட்டுறவுத்துறையை மேம்படுத்த வேண்டும்

யாழ்ப்பாணம், டிசெ.8

கூட்டுறவுத்துறையை அபிவிருத்தி செய்யவும், சிறந்த வினைத்திறன்மிக்க கூட்டுறவுச்சேவையாகத் தரம் உயர்த்தவும் சகலரும் ஒன்றுசேர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 60 ஆவது நினைவுதின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தில் சகல கூட்டுறவு அமைப்புகளும் ஒன்றுசேர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வரவேண்டும்.

1977 ஆம் ஆண்டளவில் கூட்டுறவு கொடிகட்டிப் பறந்தது. கூட்டுறவுக்கென தனிமதிப்பு இருந்தது. மக்கள் மயப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சேவையாகக் காணப்பட்டது. அப்போதைய கூட்டுறவுக்கும் இப்போதைய கூட்டுறவுக்கும் பெரும் இடைவெளி காணப்படுகிறது.

கூட்டுறவுத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும். கூட்டுறவாளர்களின் சேவைகள், ஒத்துழைப்புகள் கூட்டுறவுக்கு மிகவும் முக்கியமானவை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-33-17)

30 ஆம் திகதிவரை தொடர்ச்சியாக

## யாழ்ப்பாணம் - கொழும்புக்கு குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில்

கொழும்பு, டிசெ.8

**யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரை குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில் சேவை எதிர்வரும் 30ஆம் திகதி வரை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

இதுவரை காலமும் வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் மாத்திரம் சேவையை வழங்கி வந்த கடுகதி ரயில், தற்போதைய பாடசாலை விடுமுறை மற்றும் சுற்றுலாப் பயணிகளின் கோரிக்கைக்கு அமைவாக தனது சேவையை தொடர்ச்சியாக முன்னெடுத்துள்ளது. ஒவ்வொரு நாளும் காலை 5.30 மணிக்கு கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் குளிரூட்டப்பட்ட புகையிரதமானது 11:15 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்தை வந்தடையும்.

பின்னர் காங்கேசன்துறையிலிருந்து மதியம் 12.34 க்கு தனது சேவையை ஆரம்பிக்கும் புகையிரதம் இரவு 7.20 மணிக்கு மீண்டும் கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்தை சென்றடைகிறது. (ச-இ)

## மின்கட்டணம் குறையாது

கொழும்பு, டிசெ.8

தற்போதுள்ள மின்சாரக் கட்டணத்தை திருத்தம் செய்யாமல் எதிர்வரும் 6 மாதங்களுக்குத் தொடர்ச்சியாகப் பேணுமாறு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் இலங்கை மின்சாரசபை முன்மொழிந்துள் ளது.

மின்சாரக் கட்டணத்தை ஆறு முதல் 11 வீதம் வரை குறைப்பதற்கான முன்மொழிவுகளை இலங்கை மின்சாரசபை முன்னர் சமர்ப்பித்திருந்த நிலையில், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதனை நிராகரித்திருந்தது.

அடுத்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களையும் கருத்தில் கொண்டு கட்டணத் திருத்த முன்மொழிவைத் திருத்துமாறு ஆணைக்குழு மின்சாரசபைக்கு அறிவித்தது.

அதற்கமைய நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கபட்ட முன்மொழிவில் அடுத்த 6 மாதங்களுக்கு மின்கட்டணத்தைத் திருத்தம் செய்யாமல் இருக்கத் தீர்மானிக்கப்பட்டுள் ளது. (ச-இ)

## குருதிக்கொடை இன்று

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ். போதனா மருத்துவமனையின் தேவை கருதி கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும், குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு கோண்டாவில் குட்டிச் சுட்டி முன்பள்ளி மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் குருதிக்கொடை வழங்கும் அனைவருக்கும் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதோடு, இதில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-45-66)



## வல்வெட்டித்துறையில் டெங்கு ஒழிப்பு சோதனை

யாழ்ப்பாணம், டிசெ.8

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் ஆளுகைக்குட்பட்ட பொலிகண்டி மேற்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டம் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது வீடுகள் களத்தரிசிப்பு மேற்கொள்ளப்பட்டதுடன், நுளம்பு பெருகக்கூடிய சுற்றுச்சூழலை வைத்திருந்த 12 குடியிருப்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ரி-100)

## சிவப்புச் சீனிக்கு வற்வரி நீக்கம்

கொழும்பு, டிசெ.8

சிவப்புச் சீனி மீதான வற்வரியை நீக்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படும் என கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார். தொழிற்சாலையில் இருந்து வெளி வரும் போது ஒரு கிலோ சிவப்புச் சீனி 300 ரூபாவாகவும் சந்தையில் ஒரு கிலோ வெள்ளைச் சீனி 220 ரூபாவாகவும் காணப்படுகின்றன. இலங்கைக்கு வெளியில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வெள்ளைச் சீனிக்கு வற்வரி அறவிடப்படுவதில்லை. ஆனால் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பழுப்பு சர்க்கரைக்கு 18 சதவீதம் வற் மற்றும் 2.5 சதவீதம் வரி விதிக்கப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைப்பணிப் பயிற்சி நிறைவு நிகழ்வு

பனை அபிவிருத்திச்சபையின் அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்தால் நடத்தப்பட்ட ஆறுமாதகாலக் கைப்பணிப் பயிற்சி கடந்த புதன்கிழமை பரிசில் வழங்கும் விழாவுடன் நிறைவு பெற்றது. நிகழ்வில் பயிற்சித் திட்டத்தின் பயனாளிகள் அனைவருக்கும் எதிர்கால முயற்சிகளுக்கு உதவும் வகையில் பனை அபிவிருத்திச்சபையால் வழங்கப்படும் கைப்பணிப் பொருள்கள் தயாரிக்கும் உபகரணங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் விநாயகமூர்த்தி சகாதேவன், சிறைச்சாலைத் திணைக்களம், வனத் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், பனை அபிவிருத்திச்சபையின் பொது முகாமையாளர் விஜீந்திரன் மற்றும் பனை அபிவிருத்திச்சபையின் பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-45-125)


## வேலையாள் தேவை

தோட்ட வேலை செய்வதில் அனுபவம் உள்ளவர் தேவை.(அச்சுவேலி) சம்பளம் (2500 + மதிய உணவு)

தொடர்பு: 077 993 8348

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

பிரிவு - 57

* Diploma in English / Spoken English
* Diploma in Information & Communication Technology
* Diploma in Artificial Intelligence (AI)

ஏனைய பிரிவுகள்

* Diploma in Human Resource Management (ICVE Approved)
* Diploma in Human Rights
* Diploma in Foundation Law
* Diploma in Leadership & Business Management
* Diploma in Caregiver
* Diploma in Political Science

ஆரம்பம் 14.12.2024

| காலம் | பெறுமதிமிக்க |
|---|---|
| 03 மாதங்கள் | சான்றிதழ் |

(CS 1925) A-1

பாடசாலை மாணவர்களுக்கான விடுமுறை கால வகுப்புக்கள்.
English, ICT (Grade 6-11, G.C.E O/L.A/L) ஆரம்பமாகின்றன.

IPS to your future

Thirunelvely
T.P: 077 570 4893
077 016 1143

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு GPS மைதானத்திற்கு அண்மையில் இரண்டு பரப்பு நல்ல சூழல் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 128 1633

## வேலையாட்கள் தேவை

ஊரெழுவில் அமைந்துள்ள பிரபல உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை. (ரொட்டி போடத் தெரிந்தவர்கள் மற்றும் சமையலாளர்கள் ஆண், பெண் இருபாலரும்)

தொடர்புகளுக்கு:
075 230 1104, 075 256 5244, 074 230 1234


## நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் - 2024

- திகதி - 22.12.2024 ஞாயிற்றுக்கிழமை
- நேரம் - காலை 10.00 மணி
- இடம் - பாடசாலை பிரார்த்தனை மண்டபம்.

அன்புடையீர்!

நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 22.12.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலையின் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது சமுகம்தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

- இறைவணக்கம்
- தலைமை உரை
- சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல்
- கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
- புதிய நிர்வாகத் தெரிவு
- பாடசாலை அபிவிருத்தி சார் கலந்துரையாடல்
- நன்றியுரை


நன்றி

ம. கார்த்தீபன்
செயலாளர்

(CS 4385) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 09 . 1947



மறைவு
07 . 12 . 2024

### இராசா சண்முகலிங்கம்

(ஓய்வு பெற்ற கிளைமுகாமையாளர் அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம் )

அச்சுவேலி தெற்கினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசா சண்முகலிங்கம் அவர்கள் நேற்று (07.12.2024) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா-பறுவதம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம்-பாறுபதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் விமலேஸ்வரியின் அன்புக் கணவரும் கமலாதேவி, கணேசலிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுபாஜினி, கஜனி, வனோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் திருப்பரன், ஜெயக்குமார், வாகீசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சாதுர்யன், பானுஷன், ஜெய்ஷான், சேயோன், சப்தனா, கவின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று அச்சுவேலி முழக்கன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 43856) P-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 08 . 1934



மறைவு
07 . 12 . 2024

### சின்னையா ஜெகானந்தம் (B.A)

( ஓய்வு பெற்ற ஆசிரியர் யாழ் இந்துக்கல்லூரி)

கம்பர்மலை உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும பிடாரி அம்மன் கோவிலடி கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா ஜெகநாதன் (டடாப்பா) நேற்று (07.12.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூரணம்-சின்னையா தம்பதியரின் அன்பு மகனும் பாலசரஸ்வதியின் அன்புக் கணவரும் கந்தையா (வித்துவான்)-செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் தங்கவேல், இரத்தினமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பிடாரி அம்மன் கோவிலடி,
கொக்குவில் மேற்கு.
கொக்குவில்.

தகவல்:
பெறாமகன்- மயூரன்
077 726 2784

(CR 2004) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 350 பவுண்...

யாழ்ப்பாணத்தில் கோப்பாய், கோண்டாவில், மானிப்பாய் ஆகிய பகுதிகளில் கடந்த இரண்டு வருடங்களாக 350 பவுணுக்கும் மேற்பட்ட நகைகளைத் திருடிய நபர், கொழும்பில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் இந்திக தலைமையிலான குழுவினராலேயே அந்த நபர் கைது செய்யகப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளின்போது பல்வேறுபட்ட திடுக்கிடும் தகவல்கள் பொலிஸாருக்குத் தெரியவந்துள்ளன.

புங்குடுதீவைப் பூர்விகமாகக் கொண்ட சந்தேகநபர், நீண்டகாலமாக கொழும்பில் வசித்து வருகின்றார். ஒவ்வொரு தடவையிலும் திருட்டில் ஈடுபடும்போது அவர் கொழும்பிலிருந்து காரில்தான் வந்து சென்றுள்ளார். பகற்பொழுதில் வீடுகளைக் கவனித்து, வீட்டில் இருப்பவர்களின் எண்ணிக்கை, அந்த வீட்டில் இருப்பவர்களின் பொருளாதார நிலை உள்ளிட்ட தகவல்களை உறுதிப்படுத்திய பின்னரேயே அவர் திருட்டில் ஈடுபட்டு வந்துள்ளார்.

கொழும்பிலிருந்து போக்குவரத்து மேற்கொள்ளும் காரை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு, சைக்கிள் மூலமே வீடுவீடாகப் பயணித்து அதிகாலை ஒரு மணிக்கும் மூன்று மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் அவர் திருட்டுகளில் ஈடுபட்டுள்ளார் என்று பொலிஸார் கூறியுள்ளனர். திருடிய பின்னர் அவர் தனது மனைவியுடன் அன்றையதினமே கொழும்புக்குத் திரும்பிச் சென்றுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 90 பவுண் நகைகள் உருக்கிய நிலையிலும், ஆபரணங்களாகவும் மீட்கப்பட்டுள்ளன. சில நகைகள் வங்கிகளிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், சந்தேகநபர் கைது செய்யப்படும்போது அவருடைய மனைவி 50 பவுண் நகைகளுடன் தப்பியோடினார் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

சுமார் 220 பவுணுக்கும் மேற்பட்ட நகைகளுக்கு என்ன நடந்தது என்ற விவரங்கள் தெரியவரவில்லை. ஆனால், சந்தேகநபர் ஒன்றரைக் கோடி ரூபாவுக்கு கொழும்பில் வீடொன்றை புதிதாகக் கொள்வனவு செய்துள்ளார்.

சந்தேகநபர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது, அவரை மூன்று நாள்களுக்குத் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை நடத்துவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன், சந்தேகநபரிடம் இருந்து நகைகளைக் கொள்வனவு செய்தவர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-ம-26)

## பூநகரிக்கு...

நகரமயப்படுத்துவதற்காக 500 மில்லியன் ரூபா 2024 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதற்காக தனது பதவிக் காலத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பூநகரிப் பிரதேசத்துக்கு வருகைதந்து அங்குரார்ப்பண நிகழ்வையும் ஆரம்பித்துவைத்தார்.

இந்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேலைகள் முன்னெடுக்க அனுமதிக்கப்பட்டிருந்தது. பின்னர் குறித்த திட்டத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கொழும்புத் தலைமையகம் கையில் எடுத்தது.

திட்டத்தை நிறைவேற்றும் முகமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்த வருடம் அதிகளவான கூட்டங்கள் இடம்பெற்றபோதிலும் இந்த வருடம் நிறைவடையும் நிலையிலும் வேலைகள்எவையும்முன்னெடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் வேலைகள் ஏதும் முன்னெடுக்கப்படாத நிலையில் செலவழிக்கப்படாத குறித்த ஒதுக்கீட்டு நிதி மீளப்பெறப்படலாம் என்று வடமாகாணசபை வட்டாரங்களிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

மாகாணசபையின் உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் இந்தத் திட்டத்தைச் சாதகமாக முன்னெடுக்க சில முன்னகர்வுகள் இடம்பெற்றபொழுதும் புதிதாக அமைக்கப்பட்ட அரசாங்கத்தின் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் அதனை இடைநிறுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி வலயத்தை அடிப்படையாகக் கொண்ட பூநகரிப் பிரதேசத்துக்கு ஒதுக்கப்பட்ட இந்த நிதி மீளச் செல்வது பிரதேச அபிவிருத்திக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தும் என்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை இனவாத அடிப்படையில் செயற்படுகிறதா என்றும் ஐயங்கொள்ள நேரிடுவதாகக் கூறப்படுகிறது. (ச-125)

## காணாமலாக்கப்...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் இப்போதும் எமது உறவுகளை தொடர்ச்சியாகத் தேடிவருகின்றோம். எமக்குரிய பதில்கள் இன்னமும் வழங்கப்படவில்லை. காணாமலாக்கப்பட்டோருக்காக அமைக்கப்படும் அல்லது பரிந்துரைக்கப்படும் உள்ளகப் பொறிமுறைகளில் எமக்கு நம்பிக்கையில்லை. நாம் சர்வதேச விசாரணைகளையே திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றோம். அதுதான் எமது முதலும் முடிவுமான கோரிக்கையாக உள்ளது. எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மார்களுக்கு ஒரு லட்சம் ரூபாவையோ அல்லது ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவையோ வழங்கி போராட்டத்தை முடித்துவிட இலங்கை அரசாங்கம் முயன்று வருகின்றது. பணத்தை நாம் கோரவில்லை. மரணச் சான்தழையும் நாம் கோரவில்லை. நீதிதான் எமக்குத் தேவை. எனவே, சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக அமைக்கப்படும் பொறி முறைகளை நாம் திட்டவட்ட மாக நிராகரிக்கின்றோம் - என்றனர்.

(அ-ம-125-20)

## அல்வாயில்...

சுகவீனமுற்று உயிரிழந்துள்ளார்.

அல்வாய் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த செல்வகுமார் நிரோஷா (வயது-32) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வீட்டிலிருந்தபோது அவர் திடீர் சுகவீனமுற்றதைத் தொடர்ந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதையடுத்தே சிகிச்சையின் போது உயிரி[illegible]

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-ம-66)

## கறுப்புப்...

ஆசிய அலுவல்களுக்கான அமெரிக்கப் பிரதிநிதி டொனால்ட் லூ இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். அவர் நேற்று ஜனாதிபதி அநுரவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இதன்போதே, இலங்கை அரசாங்கத்துக்கு அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று டொனால்ட் லூ தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டத்துக்கு எந்த நேரத்திலும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு அமெரிக்கா தயாராக உள்ளது. அத்துடன், இலங்கைக்கு வெளியில் கொண்டு செல்லப்பட்டுள்ள பணத்தை மீண்டும் கொண்டுவருவதற்கான முயற்சிகளுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் அமெரிக்கா தயாராக உள்ளது என்றும் டொனால்ட் லூ கூறியுள்ளார்.

இதற்கு, இலங்கையில் ஊழல் மற்றும் வீண்விரயம் என்பன மிக மோசமான வகையில் அதிகரித்துள்ளன. எனவே, ஊழல் மோசடிகளை நாட்டில் இருந்து முற்றாகத் துடைந்தெறிந்து நிலையான அபிவிருத்தியை நோக்கிச் செல்வதற்கான பயணத்தை ஆரம்பித்துள்ளோம் என்று அமெரிக்கப் பிரதிநிதியிடம், ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார். (ம-இ)

## முள்ளிவாய்க்காலில்...

மீட்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் நிலை தற்போது இயல்புக்குத் திரும்பி வருகின்றது. வெள்ளம் வடிந்தோடியதைத் தொடர்ந்து இந்த வெடிபொருள்கள் மேல் கிளம்பியுள்ளன. இதையடுத்தே, இந்த விடயம் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, அந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. (அ-ம-19)

## பெண்...

சுட்டுக்கொன்ற சந்தேகத்தில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தப் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களே நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவருக்கு 41 வயது என்றும் இருவருக்கு 39 வயது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து இரண்டு துப்பாக்கிகள் மற்றும் ஹெரோய்ன், கஞ்சா போன்ற போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-22)

## உள்ளூராட்சித்...

மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பாக உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதியாக உள்ளது. இதற்கு ஏற்கனவே கோரப்பட்ட வேட்புமனுக்கள் இரத்துச் செய்யப்பட்டு புதிதாக வேட்பு மனுக்களைக் கோருவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதையடுத்தே, மார்ச் மாதத்தின் இறுதிப் பகுதியில் அல்லது ஏப்ரல் மாதத்தின் ஆரம்பத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இதற்காக புதிய வேட்புமனுக்கள் விரைவில் கோரப்படும் என்றும் கூறப்படுகின்றது. உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்காக 72 கோடி ரூபா நிதி செலவிடப்பட்ட நிலையிலேயே, அந்தத் தேர்தல் காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டிருந்தது. 341 உள்ளாட்சி சபைகளுக்கு 8 ஆயிரத்து 711 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக ஏற்கனவே கோரப்பட்ட வேட்பு மனுக்களின் அடிப்படையில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்க ளின் சார்பில் 80 ஆயிரத்து 672 பேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

(தொடர்புடைய செய்தி பக்:02)

## மதுபானப்...

அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ரணிலின் ஆட்சிக்காலத்தில், நாடளாவிய ரீதியில் வழங்கப்பட்ட மதுபான அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான விவரங்கள் அநுர அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டன. இதையடுத்தே, சட்டவிரோதமாக இந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்றும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்துக்கும் அரசாங்கம் கட்டணத்தை அறவிட்டுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ அல்லது வேறு எவருக்கோ இலஞ்சமாக மதுபான உரிமங்கள் வழங்கப்படவில்லை. அவை சட்டரீதியாக அரசாங்கத்துக்கு வருமானம் ஈட்டுவதற்காக வழங்கப்பட்டவை.

ஒவ்வொன்றும் 10, 15, 20 மில்லியன் ரூபாவுக்கு விற்கப்பட்டன. நேரடி வரிகள் இல்லாமல் வருவாய் ஈட்டுவதற்கான வழிகள் இவை. இந்த அனுமதிப்பத்திரங்களால் அரசாங்கத்தின் வருமானம் நான்கு முதல் ஐந்து பில்லியன் ரூபா வரை அதிகரிக்கும். இன்னும் 300 உரிமங்களை வழங்கவிருந்தோம். அடுத்த ஆண்டு மேலும் 300 உரிமங்களை வழங்க ஏற்பாடு செய்திருந்தோம். கலால் வரி வருவாய் நாட்டின் பிரதான வருமான ஆதாரங்களில் ஒன்றாகும் - என்றார். (அ-ம-26)

## நாட்டரிசி...

இது தொடர்பில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

அரிசியின் புதிய விலை நிர்ணயத்தை அரிசி விற்பனை நிலையங்கள் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும். எதிர்வரும் 10 நாள்களுக்குள் இந்த உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், இந்த விலை நிர்ணயத்துக்கு முரணாகச் செயற்படும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப் படுத்தப்படும். நெல் கொள்வனவுக்காக வியாபாரி களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுகின்றது. அதனால் அவர்கள் மக்களின் அரிசி நுகர்வில் கைவைக்க முடியாது. எனவே, நாளாந்தம் அரிசி ஆலைகளிலிருந்து வெளிவரும் அரிசியின் அளவு கணக்கிடப்படும் - என்றார். (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் ஒடுக்குமுறை விழிப்புணர்வு நிகழ்வு

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையில் கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டு வர ஒன்றுபடுவோம்' எனும் தொனிப்பொருளிலான நிகழ்வு கைதடி வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பொது இடங்களில் பாலின அடிப்படையிலான வன்முறையைத் தடுத்தல் மற்றும் ஒழித்தல் தொடர்பான மனுவினை சமூக மன்றங்களின் பிரதிநிதிகளால் ஆளுநரிடம் கையளிக்கப்படவுள்ளதோடு, மனித உரிமைகள் தொடர்பான பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் என்.வேதநாயகன், வடமாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கோசலை மதன், வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பி.வாகீசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-45-159)

## விஷப்பாம்புகளால் அவதியுறும் மக்கள்

யாழ்., டிசெ.8

கோப்பாய்ப் பிரதேச குடியிருப்புகளுக்குள் விஷப்பாம்புகள் நுழைவதால் அச்சநிலை ஏற்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வயல்களில் வெள்ளம் அதிகளவு தேங்கி நிற்பதால் விஷப் பாம்புகள் குடியிருப்புள்ளை நோக்கி விரைகின்றன.

அத்துடன் வயற்கரைப்பகுதியிலும் அதிகளவில் விஷப் பாம்புகளின் நடமாட்டம் காணப்படுவதால் வயல்களுக்குச் செல்வோர் அச்சத்துடனேயே செல்ல வேண்டியுள்ளது என்றும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ரி-17)


### மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 65 ரூபா.
நிலம் இழுத்துப் பதிக்க - 90 ரூபா.
077 334 1281
(CS/56743) J-1

### தேவை

நல்ல நிலையில் உள்ள TATA Batte (வற்றி) தேவை.
தொடர்புகளுக்கு:-
076 560 0872
(CS/56853) J-1

### கடைகள் வாடகைக்கு

யாழ் வைத்தியசாலை வீதியில் முதலாம் மாடிக் கடைகள் வாடகைக்கு உண்டு.
அலுவலகத்திற்கும் ஏற்றது.
தொடர்புகளுக்கு:-
077 828 1956
(CS/56845) J-1

### விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பஸன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விளும்பி, நெல்லி, முருங்கை, பப்பா, பொமிலோசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்தான், ஏலக்காய், சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா, கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில் 077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

### வாடகைக்கு

வவுனியாவில் இயங்கும் சுப்பர் மார்க்கட் கொமிசன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.
தொடர்பு: 074 035 2940

### மணமகன் தேவை

1996, இந்து, பூரம், DOCTOR
பூர்வீகம் - கிளிநொச்சி, வதியுமிடம் - வவுனியா
மணமகள் பதிவு இல: 11252.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com
(CS/29454B) J-1

### விற்பனைக்கு

ஒரு மாத கினிக்கோழி குஞ்சு விற்பனைக்கு உண்டு.
மானிப்பாய் மெமோறியல் பாடசாலை முன்பாக
ஒரு சோடி 2500/-
076 634 8343
(CS/56853) J-1

### இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.
பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்
Ts&Cs apply
Www.inaipa.com
(CS/56684) J-1

### வேலையாட்கள் தேவை

கொழும்பிலுள்ள உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- தோசை போடுபவர்கள்
- Drivers
- வடை போடுபவர்கள்
- கிளீனிங் வேலை
- பார்சல் கட்டுபவர்கள்
- ஸ்டோர் கீப்பர்ஸ்

உணவு, தங்குமிடம் இலவசம் தகுந்த சம்பளமும் வழங்கப்படும்
0773058043
0772558334
(CS/56859) J-1

### மணமகள் தேவை

1999, இந்து, சதயம், MANAGER
பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - FRANCE
மணமகன் பதிவு இல: 11260.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com
(CS/29454A) J-1

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

K.K.S வீதி, மல்லாகத்தில் அமைந்துள்ள ஒழுங்கையில் 3 அறைகள், குளியலறை, சமையலறை இதர வசதிகளுடன் கூடிய 2.5 பரப்பில் அமைந்துள்ள வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.
076 744 8099
(CS/43853) J-1

### Vacancy for Software Developer

A USA-based company with an office in Jaffna is looking for candidates for the post of Web Application Developer to work at the Jaffna office.

**Qualifications:**

- Degree in Computing/IT or equivalent experience
- Good knowledge of programming
- Knowledge in Database Management Systems
- Knowledge in Linux and server administration is a plus

Send your CV to hr@warranty-soft.com
(cs.56849) (N-1)

### மணமகன் தேவை

யாழ். வரணி இந்து 1998 இல் பிறந்த அழகிய மணமகளுக்கு வெளிநாட்டில் அல்லது உள்நாட்டில் தகுந்த மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
076 573 8096
(cs.43848) (N-1)

### டிப்பர் வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இலக்கம் | உற்பத்தி மற்றும் வகை | உற்பத்தி வருடம் |
|---|---|---|
| டிப்பர் வாகனம் | | |
| EP LL-4XXX | டாடா LPK1615 கியூப் 03 டிப்பர் | 2012 |
| SP LI-4XXX | டாடா LPK1615 கியூப் 03 டிப்பர் | 2011 |
| SP LI-8XXX | டாடா LPK1615 கியூப் 03 டிப்பர் | 2011 |
| WP LI-6XXX | டாடா LPK1615 கியூப் 03 டிப்பர் | 2011 |
| CP LH-6XXX | டாடா LPK1615 கியூப் 03 டிப்பர் | 2010 |
| EP LH-6XXX | டாடா LPK1615 கியூப் 03 டிப்பர் | 2010 |
| NW LD-2XXX | டாடா LPK1615 கியூப் 03 டிப்பர் | 2007 |
| WP LB-4XXX | டாடா LPK1615 கியூப் 03 டிப்பர் | 2006 |
| SP LB-3XXX | டாடா LPK1615 கியூப் 03 டிப்பர் | 2006 |
| WP LE-9XXX | டாடா LPK1615 கியூப் 03 டிப்பர் | 2006 |
| WP LA-2XXX | டாடா LPK1615 கியூப் 03 டிப்பர் | 2005 |
| SG LN-4XXX | லங்கா அசோக் லேலண்ட் 1618 கியூப் 03 டிப்பர் | 2017 |
| NC LI-2XXX | லங்கா அசோக் லேலண்ட் கொமேட்1613 கியூப் 03 டிப்பர் | 2011 |
| SG LI-OXXX | லங்கா அசோக் லேலண்ட் கொமேட்1613 கியூப் 03 டிப்பர் | 2011 |
| WP LH-8XXX | லங்கா அசோக் லேலண்ட் கொமேட் 1613 கியூப் 03 டிப்பர் | 2010 |
| NW LK-7XXX | லங்கா அசோக் லேலண்ட் கொமேட் 1613 கியூப் 03 டிப்பர் | 2010 |
| WP LH-5XXX | லங்கா அசோக் லேலண்ட் கொமேட் 1613 கியூப் 03 டிப்பர் | 2010 |
| SG LJ-6XXX | லங்கா அசோக் லேலண்ட் கொமேட் 1613 கியூப் 03 டிப்பர் | 2009 |
| SG LF-8XXX | லங்கா அசோக் லேலண்ட் கொமேட் கியூப் 03 டிப்பர் | 2007 |
| NW LE-6XXX | லங்கா அசோக் லேலண்ட் கொமேட் 1613 கியூப் 03 டிப்பர் | 2007 |
| NC LB-5XXX | லங்கா அசோக் லேலண்ட் கொமேட் கியூப் 03 டிப்பர் | 2006 |
| NC GM-1XXX | யுடீ நிசான் CWB536 கியூப் 05 டிப்பர் | 1997 |
| 227-5XXX | இசுசு போர்ட் கியூப் 02 டிப்பர் | 1997 |
| SG LD-2XXX | மெஸ்டா டம்ப் டிரக் KC.WG61K கியூப் 01 டிப்பர் | 1995 |

வாகனங்களை பார்வையிட: 225/A, ஜே.டீ.சொலமன் மாவத்தை, துலம்மஹர, பிலியந்தல

2024 டிசம்பர் மாதம் 09ஆந் திகதியிலிருந்து வார நாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை ( விடுமுறை நாள் தவிர்ந்த)

மேலுள்ள டிப்பர் வாகங்களுக்கான கவர்ச்சிகரமான மற்றும் உடனடி நிதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தல் இன்றி கேள்வி விற்பனையிலிருந்து அகற்றிக்கொள்ளும் உரிமை யூ.பி.பினான்ஸ் பிஎல்சி கம்பனிக்கு உள்ளது.

மேலதிக விபரங்களுக்கு தனுஷ்க 0716 037 673 | கொஸ்தா 0701 007 717

UB FINANCE
A UNIONBANK COMPANY

### அலுவலகக் கட்டடம் / காணி தேவை

- கொக்குவில், கோண்டாவில் பகுதியில் காங்கேசன்துறை வீதிக்கு அண்மையாக 20 ஊழியர்கள் கொண்ட கணினி நிறுவனம் ஒன்றிற்கு வாகனத் தரிப்பிடத்துடன் அலுவலக இடம் வாடகைக்குத் தேவை.
- கொக்குவில், கோண்டாவில் பகுதியில் காங்கேசன்துறை வீதிக்கு அண்மையாக அலுவலகம் அமைக்கக்கூடிய 2 பரப்பிற்குட்பட்ட காணி தேவை.

(cs.56850) (N-1) 077 316 3530



### ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற
அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/26, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)
தொடர்புகளுக்கு :- 077 281 1234
(CS/56852) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 24.01.1939 — மறைவு 04.12.2024

எமது ஸ்தாபனத்தில் முகாமையாளராக கடமையாற்றும்

**சிவகுமாரன் (குமார்)**

அவர்களின் அன்பு மாமியார்

## அமரர் இராசலிங்கம் சரஸ்வதி

அவர்களின் இறப்புச் செய்தி கேட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

காற்றோடு கலந்த சுவாசம்...
கண்ணீராய் வழிந்த பாசம்...
உலகினைக் கடந்து போனாலும்...
ஒரு நல்ல அன்னையை...
உங்களோடு...
பயணித்தவர்கள் மறந்து போவார்களா...

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**சாரங்கா நகைமாடம்,**
**உரிமையாளரும், சக ஊழியர்களும்.**

(cs.56858) (N-1)

# ரெலோவில் இருந்து விந்தன் இடைநீக்கம்

வவுனியா, டிசெ. 8


தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைமைக்குழு உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் கட்சியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக் குழுக்கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது. இதன்போது கட்சியின் உள்ளகத் தகவல்களை வெளிப்படுத்தியமைக்காகவே விந்தன் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்படுகின்றார் என்று அறிவிக்கப்பட்டது. அத்துடன், விந்தனிடம் விளக்கம்கோரி கடிதம் அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த தீர்மானத்தையடுத்து விந்தன் கனகரத்தினம் கூட்டத்திலிருந்து இடை நடுவில் வெளியேறினார். இதேவேளை அவர்மீது நடவடிக்கை எடுப்பதற்கு சில உறுப்பினர்கள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

இதேவேளை கட்சியின் தீர்மானத்தை மீறி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியமைக்காக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வினோநோகராதலிங்கத்திடம் விளக்கம்கோரி கடிதம் அனுப்பவுள்ளதாகவும் தலைமைக்குழு தீர்மானித்துள்ளது. (அ-ம-110)

# மரண அறிவித்தல்

பிறப்பு 23 • 11 • 1946



இறப்பு 06 • 12 • 2024

**வேதாகம வித்யாபூஷணம் பிரம்மஸ்ரீ விஸ்வநாராயண சர்மா (விஸ்வநாத ஐயர் சோமசுந்தர ஐயர்)**

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட, துர்கா குருகுல அதிபர் வேதாகம வித்யாபூஷணம் பிரம்மஸ்ரீ விஸ்வநாராயண சர்மா (விஸ்வநாத ஐயர் சோமசுந்தர ஐயர்) நேற்று முன்தினம் (06.12.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்

அன்னாரின் பூதவுடல் நேற்று (07.12.2024) சனிக்கிழமை காலை 08.30 முதல் மாலை 4.00 மணிவரை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு மாலை 4.30 மணியளவில் பூதவுடல் அவரின் பிறப்பிடமாகிய தெல்லிப்பழைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இன்று (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழையில் அன்னாரின் இல்லத்தில் (கேணியடி–துர்க்காபுரம்) நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கட்டுப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

கேணியடி, துர்க்காபுரம்

தகவல் : குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

# சின்னத்துரை தங்கம்மா



தோற்றம் 02.09.1936 — மறைவு 06.12.2024

யாழ். வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கல்வயல் சாவகச்சேரியை (நுணாவில் மத்தி) வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தங்கம்மா நேற்றுமுன்தினம் (06.12.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரை அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, பாலசிங்கம், செல்லம்மா, சிங்கராசா, முத்தம்மா மற்றும் பொன்னம்மா, அன்னபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசலட்சுமி (கனடா), லோகேஸ்வரன் (தேவிபுரம்), விஜயலட்சுமி (மட்டுவில்), தனலட்சுமி (சுவிஸ்), ஈஸ்வரன் (நுணாவில்), கேதீஸ்வரன் (மடத்தடி), மகாலட்சுமி (ஜேர்மனி), அன்னலட்சுமி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், குகனேசன் (கனடா), காலஞ்சென்ற புஸ்பராணி (தேவிபுரம்) மற்றும் கேதீஸ்வரன் (மட்டுவில்), விஜயதாசன் (சுவிஸ்), யோகேஸ்வரி (நுணாவில்), காலஞ்சென்ற மதனி (மடத்தடி), கணேசலிங்கம் (ஜேர்மனி) ஜீவரட்ணம் (வரதன் - சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், டினேசன், தாட்ஷாயினி, சிந்துயன், கோபிகன், தர்மினன், டில்சன், டிஷாந்தன், கீர்த்திகா, தர்சிகா, கார்த்திகா, தயானந்தன், திவானா, விதுனா, கபினன், தயாநந்தினி, தளிரினி, கயானன், கரிஸ், கரிணி, விபுஷனா, பிரவீன் ஆகியோரின் பேர்த்தியும், லதுஷா, தனுஷிகன், லிந்துயன், ரட்சயன், லோஜிதா, ஆதிரா, கேசிகா, கரிஸ், மதனிஷ் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**கல்வயல் வீதி,**
**நுணாவில் மத்தி, சாவகச்சேரி.**

**தகவல்:**
**ஈசன் களஞ்சியம் மற்றும் குடும்பத்தினர்.**

| | | | |
|---|---|---|---|
| ஈசன் | - 077 306 8974 | ராசலட்சுமி | - 0016 473 757 755 |
| கேதீஸ்வரன் | - 075 242 6895 | தனலட்சுமி | - 0041 3291 40220 |
| லோகேஸ்வரன் | - 077 013 7011 | மகாலட்சுமி | - 0049 1764 2777328 |
| விஜயலட்சுமி | - 077 299 1896 | அன்னலட்சுமி | - 0041 7921 04566 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## அமரர் மாரிமுத்து வேலாயுதம்

யாழ்ப்பாணம் பன்னாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மற்றும் பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து வேலாயுதம் (உரிமையாளர் - Anuja Stores கொம்பெனித் தெரு மலே வீதி கொழும்பு) அவர்கள் கடந்த (04.12.2024) புதன்கிழமை இரவு கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவபாதம், நடேஸ்வரன் மற்றும் மாரிமுத்து சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும், காமாட்சிப்பிள்ளையின் பாசமிகு கணவரும், மகேஸ்வரியின் மருமகனும், சஜீவன், டேவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் கரோலின் அவர்களின் மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் தாவடியிலுள்ள சேமக்காலையில் நல்லடக்க ஆராதனை நடைபெற்று பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 420 0484

(CS 1994) J-1

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
31 . 07 . 1944



விண்ணில்
21 . 11 . 2023

அமரர்
## இராசதுரை இராசேந்திரம்

**திதி: 08.12.2024**


ஆண்டு ஒன்று ஆனதுவே!
ஆயினும் மாண்டிடுமோ உம் நினைவு!
நும் தூய அன்பும் எதற்கும்
துவண்டிடா நிமிர் நெஞ்சும்
நாம் வாழ வழி காட்டுதப்பா!
வையத்தே எமை என்றும்
வாழ்த்தி வழி காட்டிடுங்கள்

ஆனந்தா வீதி,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.
077 911 5534

(CS/56819) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 08.12.1932
மறைவு 28.11.2024

## கந்தையா கமலநாதன்

இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் பதியருகிலும், மல்லாகம், லண்டன் Newbury Park, Wickford ஐ வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் கந்தையா கமலநாதன் அவர்கள் கடந்த (28. 11. 2024) வியாழக்கிழமை லண்டனில் காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அளவெட்டியைச் சேர்ந்த கந்தையா - நாகம்மா தம்பதியரின் மூத்த மகனும், மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்துக்குமாரு - லட்சுமி தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற தங்கம்மா (இளைப்பாறிய ஆசிரியர் - மல்லாகம்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், சொக்கநாதன் மற்றும் கந்தநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ரோசாமலர்,மற்றும் கந்தசாமி, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கனகு, கந்தசாமி, ஆனந்தன், நடேசு ஆகியோரின் மைத்துனரும், ஜெயகௌரி, காலஞ்சென்றவர்களான ஜெயக்குமார், ஜெயகணேஷ், மற்றும் ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற சிவகுமார், மற்றும் ஜெயசங்கர், ஜெயபவாணி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், மயூரன் - புவனாம்பிகை, நாகரஞ்சனி (ரஞ்சோ) ஆகியோரின் பெரியப்பாவும் காலஞ்சென்ற சிவராசா, வத்சலா, முத்துலிங்கம், சாரதா, இந்திரமோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், திலக் -வேணுலக்சுமி,நிலானி - இளவரசன், நிசாந், சிவகணேஸ் - நிரோஷா, ஜெயவத்சன், இந்துஜா -மதிசுதன், துஜீவன், மதீசன் - தாட்ஷாயினி, பிரணவன், நிரேஷ், கஸ்தூரி - கிரிசான், சாருஷன், நிரூசன் - சமீரா, தீபனா, ராகவன், நிகேரா, லக்சிகா ஆகியோரின் அன்புப்பேரனும், யவனா, வேயோன், சேயோன்,இனேஷ், மேகோன், ஆரியா, அய்ரா, இனியா, ஜெய்தேவ், கைரா, அகிலன், கவின், ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை UK, நேரப்படி காலை 8.00 மணியளவில் ஆரம்பித்து பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் பின்வரும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

இடம் - Hendon Cemetery and Crematorium, Holders Hill Road, Mill Hill, NW7 1NB

அன்னாரின் இறுதிக்கிரியை தங்கம்மா இல்லத்தில் இலங்கை நேரப்படி பி.ப.1.30 மணியளவில் நேரலையில் காணலாம்.
வீட்டு முகவரி: தங்கம்மா இல்லம், தங்கம்மா அப்பாகுட்டி கனிஷ்ட வித்தியாலயத்திற்கு பக்கத்து ஒழுங்கை.
Courts வீதி, மல்லாகம்.
https://www.youtube.com/live/JZ0velK9lfo

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: ஜெயசங்கர் கமலநாதன் (மகன்) - 0044 794 477 4463

(CR/43849) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமற்ற மருந்துகளை விநியோகிக்கவில்லை

## அரசு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.8

அரசாங்க மருத்துவமனைக் கட்டமைப்பினால் தரமற்ற மருந்துகள் வழங்கப்படவில்லை எனச் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.


தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட மருந்துகள்தான் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை ஊடாக விநியோகிக்கப்படு கின்றன.

குறித்த அதிகாரசபையில் வினைத்திறனற்ற நிலை காணப்படுகின்றது. தற்காலிக மற்றும் நிரந்தரப் பதிவுகள் தற்போது விரைவுபடுத்தப் பட்டு வருகின்றன. தரமற்ற மருந்துகள் அரசாங்க மருத்துவமனைக் கட்டமைப்பின் ஊடாகச் செல்லவில்லை. தரத்தின் தன்மை தொடர்பாக பிரச்சினை இருப்பின் அதுபற்றி அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதிர்காலத்தில் விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெளிவுபடுத்தினார். (ச-இ)

**A/L இணைந்த கணிதம்**
**A/L 2025, A/L 2026**
மாணவர்களுக்கான
பிரத்தியேக வகுப்புக்கள்
வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
**077 832 4002**
(CS/56862) J-1

**வேலையாட்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அழகு சாதனப் பொருட்கள் விற்கும் கடைக்கு (பான்சி) அனுபவம் உள்ள பெண் வேலையாட்கள் தேவை.
ஆரம்ப சம்பளம் 30000 - 60000 வரை
தொடர்புகளுக்கு:-
**077 067 4452**

Jaffna Mango Queen Farmers Ltd
ஜஃப்னா மாங்கோ குயின் ஃபார்மஸ் லிமிட்ரேட்
**வருடாந்த பொதுக்கூட்டம்**
காலம் - 21.12.2024
நேரம் - காலை 10.00 மணி
இடம் - அல்லாரை அறுகம்புலம் ஆலய மண்டபம்
புதிய பணிப்பாளர், சபை அங்கத்தவர்கள் மற்றும் நிர்வாக சபை அங்கத்தவர்கள் தேர்வு இடம்பெற உள்ளதால் சகல பயனாளிகளையும் மேற்படி கூட்டத்தில் கலந்து பயன்பெறுமாறு கேட்டுகொள்கின்றேன்.
பா.மனோகரன்
தலைவர்
(CS/56863) J-1



# மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம், டிசெ. 8

மழைவெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு மக்கள் தற்காலிகமாகத் தங்கியுள்ள கல்லுண்டாய், உடுவில் நலன்புரி நிலையங்களில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவக் குழுவினர் கடந்த திங்கட்கிழமை இடர்கால மருத்துவச் சிகிச்சை முகாம்களை நடத்தினர். இந்த மருத்துவ முகாம்களில் பல்வேறு நோய்களுக்கான மருத்துவச் சிகிச்சைகள் வழங்கப்பட்டதுடன் சுகாதார அறிவுரைகளும் வழங்கப்பட்டன. (ச-22,66)



வட்டுக்கோட்டை பசங்கிரா ப்ரத்யங்கிரா அறக்கட்டளையின் சேவையில் கனடாவில் வசிக்கும் சுந்தரா ஐயா குடும்பத்தினரின் நிதி அனுசரணையில் அராலி கிழக்கு முதலாம் வட்டாரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 50 நுளம்புவலைகள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன. (ச-33-63)



# உலருணவு வழங்கல்

சாவகச்சேரி, டிசெ.8

சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினர் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அத்தியாவசிய உலருணவுப் பொருள்களை நேற்று சனிக்கிழமை வழங்கினர்.

சங்கத் தலைவர். சி.சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதேச கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.ஜேம்சன் 120 பேருக்கு நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்தார். (ரி-9)

**மரண அறிவித்தல்**

பிறப்பு
22 . 09 . 1942



இறப்பு
07 . 12 . 2024

**சோமசுந்தரகுருக்கள் - சண்முகசுந்தரம் (சைவம் ஐயா)**

தம்பசிட்டி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், 61 திருநகர் வடக்கு கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரகுருக்கள் சண்முகசுந்தரம் அவர்கள் நேற்று (07.12.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரக்குருக்கள் - விசாலாட்சிஅம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான சட்டநாதஐயர் - காமாட்சிஅம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புக் கணவரும், நாகேந்திராஜா (இந்திரா), விஜேயேந்திரராஜா (விஜி), ராஜேந்திரபிரசாத் (பிரசாத்), தயாபரன் (முரளி), காலஞ்சென்ற சசிதரன் (சசி) மற்றும் விக்னேஸ்வரன் (விக்ணா), கௌரிமனோகரி (கௌரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரியா, விஜிதா, கௌரி, பிரேமகலா, உமாசுதா, உமாசங்கர் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிவாசி, அபிசன், நிதன், சஞ்ஜீவன், சயந்தன், கௌசல்யன், மதிமிதன் , அபூர்வன், அக்சிதா, ஆர்த்திகா, நிதுசன், வைசினிகா, வைஷாலி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் கமலாம்பிகை, காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தர், ஜெயச்சந்திரன் ஆகியோரின் மூத்த சகோதரனும், காலஞ்சென்றவர்களான தையல்நாயகி, சண்முகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணியளவில் திரேசம்மா கோவிலடி, A9 வீதி, கிளிநொச்சி என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**
பிரசாத் ஐயா - 077 711 6090
விக்னா - 077 447 4294
(CS/28914) J-1



# மணப்பெண் அலங்கார தொழில்நுட்பப் பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ.8

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் மணப்பெண் அலங்காரம் தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சி பிரதேச செயலகத்தில் அண்மை யில் நடைபெற்றது. (ச-25, 9)

**காணி குத்தகைக்குத் தேவை**
கிளிநொச்சி/ முல்லைத்தீவில் 5 ஏக்கர் அல்லது அதற்கு மேற்பட்ட தோட்டக் காணி குத்தகைக்குத் தேவை.
தொடர்பு:- **070 338 3073**
(CS/1998) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

இந்தியாவில் வசிக்கும் இலங்கையை (இணுவில்) சேர்ந்த வேளாள குடும்பம் (V) 46 வயதுடைய IT Engineer மணமகனுக்கு இலங்கை, இந்தியா அல்லது வெளிநாட்டிலுள்ள படித்த மணமகள் தேவை.

**077 962 1700**

(CS/56832) J-1

## பணிநிலை வெற்றிடம்

- உதவியாளர் (Pharmacy Assistant) கவர்ச்சிகரமான சம்பளம் முன் அனுபவம் தேவை.
- பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்) இரவு நேரம் மற்றும் (பெண்) பகல் நேரம் மட்டும்.
- துப்புரவுப்பணியாளர் (ஆண்/ பெண்)

CV அனுப்பவேண்டிய முகவரி :-
sunrisemediclinic@gmail.com
நியூ சன்றைஸ் மெடி கிளினிக் அன் நியூ பேபி நீட்ஸ் அன்பாமசி
580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**070 500 0207, 076 976 7447**

## SPOKEN ENGLISH CLASSES

English கதைக்க விரும்பும் சகலரும்
GRADE 6 TO GCE O/L LITERATURE, ADVANCED LEVEL, GRADUATES வேலை செய்பவர்கள்
யாழ் இந்து வீதியில்
K.Ganesh B.A **077 766 8725**

## வாழைச்செய்கை பெரும் பாதிப்பு

அண்மையில் பெய்த காற்றுடனான கடும்மழையால் வாழைச் செய்கை பெரும் அழிவைச் சந்தித்துள்ளது என்று செய்கையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி, இடைக்காடு, உரும்பிராய், ஊரெழு போன்ற பகுதிகளில் அதிகளவில் வாழைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் வாழைச்செய்கையாளர்களுக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்க கமக்கார அமைப்புகளால் தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (ரி-17)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- 2 ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- 2 பரப்புள்ள துண்டு ஒன்றுக்குள் 6 தொடக்கம் 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- கடற்கரையை (Beach) முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- 20 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம்: - காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

**தொடர்பு: ஜெயம்**
**077 814 7389**
**077 986 5457**

(cs.1987) (N-1)

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவனில் பலாலி வீதியில் இருந்து 500 m இல் மூன்று பக்கம் மதிலால் சூழப்பட்ட இரண்டு பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு.

**077 855 8654**

(cs.56854) (N-1)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பான்சி கடை ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.
மாதாந்த சம்பளம் - 35000/-
மதிய உணவிற்கு 300 ரூபா வழங்கப்படும்.
Light vehicle வாகனம் ஓடுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**075 225 1078**

(CS/56844) J-1

## விவசாயம் சார் இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு

முற்று முழுதாக கனதியான (Havy Dutty) இயந்திரங்கள். கச்சான் உடைக்கும் இயந்திரம், கச்சான் செடியில் இருந்து பிடுங்கும் இயந்திரம், பழச்சாறு பதனிடும் இயந்திரம், பனம்பழம் பிழியும் இயந்திரம், எல்லா வகையான பழங்களையும் பிழியும் இயந்திரம், Biogas Plant (இயற்கை எரிவாயு) என்பனவும் விற்பனைக்கு உண்டு.

(CS/56814) J-1

தொடர்புகளுக்கு:- **076 238 8013**

## வேலைவாய்ப்பு விசா

யூரோப் நாடான பல்கேரியாவுக்கு 01 மாதத்தில் வேலை விசாவில் செல்வதற்கான ஒரு அரிய சந்தர்ப்பம் 15 பேருக்கு மட்டுமே அனுமதி

Visa world (Pvt) Lts
Station Road, Vavuniya.

தொடர்பு:
074 035 2940

(cs 29065) (N-1)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 30 • 10 • 1944

மறைவு 12 • 11 • 2024

கடந்த 12.11.2024 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### கந்தப்பிள்ளை ஆனந்தராஜா

(முன்னாள் சுகாதார நல சேவை சிரேஸ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (STA) Jaffna District, உலக உணவுத்திட்டம் - சிரேஸ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் கச்சேரி, யாழ்ப்பாணம்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி கிரியைகள் இன்று (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (10.12.2024) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற்று, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் M.M. திருமண மண்டபத்தில் மதிய போசன நிகழ்வும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் நோயுற்ற வேளை சகல வழிகளிலும் உதவி புரிந்த யாழ். போதனா வைத்திய சாலையின் வைத்திய நிபுணர் Doctor T.பேரானந்தராஜா, வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களுக்கும், தெல்லிப்பளை வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் மேலும் அன்னார் அமரத்துவம் அடைந்த நேரம் சகல வழிகளிலும் உறுதுணை புரிந்து அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டோருக்கும் மற்றும் தேவையான உதவிகளைச் சேவையாக வழங்கியோருக்கும் எமது மனமாரந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

No 64/06, காளிகோயில் அருகாமை
ஐயனார் கோயில் வீதி, சுன்னாகம்.

(CS/56833) J-1

குடும்பத்தினர்
077 322 2713

## காணி வீடு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் 3 பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்புகொள்ள வேண்டாம்.)

(CS/56825) J-1

தொடர்புக்கு:- **077 614 6434**

## பதவி வெற்றிடம்

யாழ். நகரில் உள்ள பிரபல வங்கியில் கீழ் காணும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

- சந்தைப்படுத்தல் முகவர் (Credit Officer), தங்க கடன் அலுவலர் (Gold Loan Officer)
- நிலையான வைப்பு/ சேமிப்பு அலுவலர் (FD/ Saving Officer)

ஆர்வம் உடையவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(CS/56834) J-1

**077 651 9372, 077 662 0057**

## ஆண் உதவியாளர் தேவை

தென் மாகாணத்தில் உள்ள பலசரக்கு கடை ஒன்றில் பணிபுரிவதற்கு ஆண் உதவியாளர் தேவை.
(Sales Assistant / Worker)
சம்பளம் : 60,000/-
தொடர்புகளுக்கு:-

(CS/56842) J-1

**077 480 3379**

## பணியாளர் தேவை

முதியோர் இல்லத்தில் பணியாற்றுவதற்கு பணியாளர் தேவை.

**077 564 4303**

## சிறுநீரகம் தேவை

"O" குருதி வகை சேர்ந்த ஒருவருக்கு
"O" குருதிவகை சிறுநீரகம் அவசரமாக தேவை.
42 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
HLA Report இருப்பின்
Whatsapp பண்ணவும்.

(CS/56660) J-1

**077 540 6732 (Whatsapp/ Call)**
**077 723 8937**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper


அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும் – வறியராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று

– நாலடியார்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2055 கார்த்திகை 23 ஞாயிற்றுக்கிழமை (08.12.2024)

நிலாந்தன்

# கஜனின் அழைப்பு?



தமிழ்மக்கள் பேரவையின் தீர்வு முன்மொழிவின் அடிப்படையில் ஏனைய கட்சிகளோடு இணைந்து செயற்படுவதற்குத் தான் தயாராக இருப்பதாக கஜேந்திரகுமார் அறிவித்துள்ளார். அந்த அழைப்பின் அடிப்படையில் அண்மையில், யாழ்ப்பாணத்தில் இரண்டு கஜன்களும் சிறீதரனைச் சந்தித்திருக்கிறார்கள்.

முதலாவதாக இந்த நகர்வை வரவேற்க வேண்டும். ஏனென்றால் இது ஏதோ ஒரு அடிப்படையில் தமிழ் ஐக்கியத்துக்கான முயற்சிதான். நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவுகளின் பின்னணியில் இந்த நகர்வு முன்னெடுக்கப்படுகின்றது.

'என்.பி.பி.' அரசாங்கம் ஒரு யாப்பை மாற்றக்கூடிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றிருக்கிறது. இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய ஒரு யாப்பை அவர்கள் உருவாக்க முயற்சிக்கக்கூடும். அந்தத் தீர்வானது ஏற்கனவே 2015இல் இருந்து 18 வரையிலுமான காலப்பகுதியில் ஒரு புதிய யாப்பை உருவாக்க எடுக்கப்பட்ட முயற்சிகளில் முன்வைக்கப்பட்ட "ஏக்கிய ராஜ்ய" என்ற தீர்வை அடிப்படையாகக் கொண்டதாக அமையலாம் என்ற சந்தேகங்களின் பின்னணியில், கஜேந்திரகுமாரின் மேற்படி அறிவிப்பு வந்திருக்கின்றது.

அந்த யாப்புருவாக்க முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த தமிழரசுக் கட்சி உட்பட ஏனைய கட்சிகளும் பங்களிப்பைச் செய்தன. அது ஒற்றையாட்சிக்கு உட்பட்ட ஒரு தீர்வு என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கூறியது. அநுர அரசாங்கம் அந்த தீர்வு முயற்சியைத் தொடரலாம் என்ற சந்தேகம் இப்பொழுது உண்டு. எனவே மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் ஒரு அரசாங்கம் அவ்வாறு யாப்புருவாக்க முயற்சியை முன்னெடுக்கும் பொழுது தமிழ்த்தரப்பானது தன் எதிர்ப்பை வலிமையாக ஒற்றுமையாகக் காட்டவேண்டிய ஒரு தேவை எழுந்திருக்கிறது. அந்த தேவையின் அடிப்படையில்தான் கஜனின் மேற்படி நகர்வு முன்னெடுக்கப்படுகின்றது.

கடந்த 15 ஆண்டுகளாக ஐக்கிய முயற்சிகளில் பெருமளவுக்கு ஒத்துழைக்காத ஒரு கட்சி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிதான். எனினும் முன்னணியும் ஈடுபாடு காட்டிய ஐக்கிய முயற்சிகளின்போது உருவாக்கப்படும் ஆவணங்களில், விட்டுக்கொடுப்பற்ற தமிழ் நிலைப்பாடுகளை எடுப்பதற்கும், அந்த ஆவணங்களின் கொள்கைரீதியான தெளிவான சரியான நிலைப்பாடுகளை எடுப்பதற்கும் முன்னணிதான் அதிகம் பங்களிப்பைச் செய்வதுண்டு.

தமிழ்மக்கள் பேரவையின் தீர்வு முன்மொழிவு விடயத்திலும் முன்னணியின் உழைப்பு அதிகம் உண்டு. சிவில் சமூகமும் அரசியல் கட்சிகளும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பு பேரவையாகும். அதன் இணைத்தலைவர்களில் ஒருவராக அப்பொழுது முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன் இருந்தார். எனவே பேரவையின் முன்மொழிவுக்கு கனதி அதிகமுண்டு. அந்த முன்மொழிவை உருவாக்கும் பொழுது பேரவையில் அங்கம் வகித்த கட்சிகள் பின்னர் ஒன்றுக்கொன்று முரண்பட்டுக் கொண்டன. பேரவையும் செயலிழந்தது. பேரவையின் முடிவுக்கு முன்னணியும் ஒரு முக்கியமான காரணம். எனினும் இப்பொழுது அந்த முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டு இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் தொடர்பில் ஒரு ஐக்கியத் தளத்தை கட்டியெழுப்புவதற்கு முன்னணி முன்வந்திருக்கிறது.

கஜன் அழைப்பு விடுத்திருப்பது பிரதானமாக இரண்டு தரப்புகளுக்கு. ஒன்று ஜனநாயகத் தமிழ்த் தேசிய முன்னணி. மற்றது தமிழரசுக் கட்சி. இதில் ஜனநாயகத் தமிழ்த் தேசிய முன்னணியின் குறிப்பிட்ட சில கட்சிகள் ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவைக்குள் அங்கம் வகித்தன. தீர்வு முன்மொழிவை உருவாக்கும் நடவடிக்கைகளிலும் பங்களிப்பை நல்கின. அதேசமயம் அந்தக்கட்சிகள் சில தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் இருந்தன. கூட்டமைப்பு, ரணில்- மைத்திரி அரசாங்கத்தோடு சேர்ந்து உருவாக்கிய ஏக்கிய ராஜ்ய என்ற வரைவுக்கும் அவை பங்களிப்பை வழங்கின.

அந்தத் தீர்வு முயற்சியில் தமிழ்த் தரப்பில் சுமந்திரன் தீர்மானிக்கும் சக்தியாகச் செயற்பட்டார். கடந்த நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரங்களின் பொழுது அவர் அந்த தீர்வு முயற்சியை ஆதரித்துப் பேசியும் இருக்கிறார். அந்த யாப்புருவாக்க முயற்சியில் ஜே.வி.பி.யும் பங்காளியாக இருந்ததை அவர் ஒரு சாதகமான அம்சமாகச் சுட்டிக்காட்டியும் இருக்கிறார். எனவே இப்பொழுது கேள்வி என்னவென்றால், அநுர அரசாங்கமானது ஏக்கிய ராஜ்யவை மீண்டும் தூசுதட்டி எடுத்தால் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு என்ன? சுமந்திரனின் நிலைப்பாடு என்ன?

**முன்னணியின் ஐக்கியத்துக்கு எதிரான முன்னைய நிலைப்பாடுகளை தூக்கிப்பிடிக்க இது நேரமல்ல. கஜேந்திரகுமாரின் அழைப்பு காலத்தின் தேவை. கட்சிகளை ஒருங்கிணைக்கும் பணியில் கட்சிகளின் மீது செல்வாக்கை பிரயோகிக்கக்கூடிய மக்கள் அமைப்புகள் இல்லாத ஒரு வெற்றிடத்தில், ஒரு கட்சியே முன்வந்து அந்த அழைப்பை விடுப்பது தவிர்க்கமுடியாதது.**

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த கட்சிகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது, இந்தியாவின் கைக்கூலிகள், இந்தியா சொல்வதைக் கேட்டு நடப்பவர்கள் என்று திரும்பத் திரும்ப குற்றஞ்சாட்டி வந்திருக்கிறது. குறிப்பாக கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அந்தக்கட்சிகள் தமிழ்ப் பொதுவேட்பாளரை முன்னி றுத்திய தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்புக்குள் அங்கம் வகித்தன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொதுவேட்பாளரை இந்தியாவின் சூழ்ச்சி என்று வர்ணித்தது. அதில் ஈடுபட்ட சிவில் சமூகத்தவர்களையும் முதுகெலும்பில்லாதவர்கள், இந்தியாவுக்கு ஊழியம் செய்பவர்கள் என்று வசைபாடியது. ஆனால் 'பொதுவேட்பாளர் பெற்ற வாக்குகள் தேசியவாத வாக்குகளே' என்று பின்னர் கஜேந்திரகுமார் ஒரு விளக்கமும் கொடுத்தார்.

இப்பொழுது மேற்படி கட்சிகளை பேரவையின் முன்மொழிவின் கீழ் ஒன்றிணையுமாறு அவர் கேட்டிருக்கிறார். ஆயின் அந்தக்கட்சிகள் இப்பொழுது இந்தியாவின் பிடிக்குள் இல்லை என்று அவர் நம்புகிறாரா? ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் கஜேந்திரகுமாரின் அழைப்புக்கு உத்தியோகபூர்வமாக பதில் எதையும் கூறியிருக்கவில்லை

கடந்த 15 ஆண்டுகளில் ஐக்கிய முயற்சிகளுக்கு பெரும்பாலும் ஆதரவை வழங்காத ஒரு கட்சி இவ்வாறு அழைப்பு விடுத்திருப்பது சாதகமான ஒரு மாற்றம்தான். கடந்த 15ஆண்டுகளிலும் கட்சிகளை ஒருங்கிணைக்கும் வேலைகளை பெரும்பாலும் சிவில் சமூகங்கள்தான் முன்னெடுத்திருக்கின்றன. மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயரின் முன்முயற்சியால் ஒழுங்குசெய்யப்பட்ட ஒரு சந்திப்பில் இருந்து தொடங்கி, தமிழ் பொதுவேட்பாளரை முன்னிறுத்தும் பொதுக்கட்டமைப்பு வரையிலுமான பெரும்பாலான ஐக்கிய முயற்சிகளின் அனுசரணையாளர்களாக சிவில் சமூகங்களே செயற்பட்டிருக்கின்றன. தமிழ்மக்கள் பேரவை, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணி, பல்கலைக்கழக மாணவர்கள் தலையிட்டு உருவாக்கிய 13 அம்ச ஆவணம், 2021 இல் ஐ.நா.வுக்கு எழுதிய கூட்டுக் கடிதம், அதன்பின் இந்தியச் சிறப்பு முகாம்களில் இருக்கும் ஈழத்தமிழ் கைதிகளை விடுவிக்குமாறு கேட்டு தமிழக முதல்வருக்கு எழுதப்பட்ட கூட்டுக் கடிதம், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுவேட்பாளரை முன்னிறுத்தியமை ஆகிய பெரும்பாலான ஐக்கிய முயற்சிகள் அனைத்தின் பின்னணியிலும் சிவில் சமூகங்கள் தான் அனுசரணை புரிந்தன.

அவ்வாறு மக்கள் அமைப்புகளின் அனுசரணையோடு உருவாக்கப்பட்ட ஒரு ஆவணத்தைத்தான் இப்பொழுது கஜேந்திரகுமார் ஒன்றிணைவுக்கான அடிப்படையாக எடுத்திருக்கிறார். இந்த முயற்சிகளின் நோக்கம் அநுர அரசு கொண்டுவரக்கூடிய இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியை தமிழ்த் தரப்பு ஐக்கியமாக எதிர்கொள்வதே.

அது நல்ல விடயம். அதைப் பாராட்ட வேண்டும். ஆனால் அந்த ஆவணத்தை உருவாக்கிய தமிழ் மக்கள் பேரவை இப்பொழுது இல்லை. அது செயற்படாத ஐந்தாண்டு கால இடைவெளிக்கு பின் தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற கட்டமைப்பு உருவாகியது. தமிழ்மக்கள் பொதுச்சபையின் முன்னெடுப்பினால் தமிழ்த் தேசிய பொதுக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இப்பொழுது அதுவும் செயற்படுவதில்லை.

கடந்த 15ஆண்டுகளிலும் தமிழ்மக்கள் மத்தியில் தோன்றிய மக்கள் அமைப்புகள் ஒரு கட்டத்துக்குப் பின் தொடர்ச்சியாக செயற்படவில்லை. தமிழ் மக்கள் பேரவை, தமிழ் மரபுரிமைப் பேரவை, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரெழுச்சி இயக்கம், தமிழ் மக்கள் பொதுச்சபை, தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு ஆகிய அனைத்தும் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு பின் தேங்கியிருக்கும் ஒரு நிலைமையை காண்கிறோம். ஏன்?

ஏனென்றால், சிவில் சமூகங்களுக்கு அடிப்படையான வரையறைகள் உண்டு. சிவில் சமூகங்கள் கட்சிகளைப்போல செயற்படமுடியாது.

06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படையால் கடத்தப்பட்ட மாணவர்கள் விசாரணையில் வெளிவந்த திடுக்கிடும் தகவல்கள்




கே.வி.தவராசா

**2008** ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி இரவு 10 மணி.

மூன்று தமிழ் இளைஞர்களும் அவர்களது நண்பர்களான இரண்டு முஸ்லிம் இளைஞர்களும் பயணம் செய்த வாகனத்தோடு கொழும்பு தெஹிவளைப் பகுதியில் கடத்தப்பட்டனர். இவர்களை இலங்கை கடற்படையினரே கடத்தியிருந்தனர். இவ்வாறு கடற்படையால் கடத்தப்பட்ட ஐந்து மாணவர்களின் பெற்றோர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரிக்கப்பட்டவேளையில் சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

கொழும்பு கொட்டாஞ்சேனையை வதிவிடமாகக் கொண்ட ஐந்து மாணவர்களில் நாகநாதன் ரஜீவ் என்ற மாணவன் 18.09.2008 அன்று மருத்துவ மேற்படிப்புக்காக வெளிநாடு செல்ல இருந்தார். இந்த நிலையில் தனது நண்பர்களான மற்றைய நான்கு மாணவர்களுக்கும் இரவுவிருந்தொன்றினை வழங்க செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி உணவு விடுதிக்கு அழைத்துச் சென்றார். விருந்தை முடித்துக்கொண்டு திரும்பி வந்தவேளையிலேயே 5 மாணவர்களும் தெஹிவளை பாலத்துக்கு அருகாமையில் வைத்து வெள்ளை வாகனத்தில் கடத்தப்பட்டனர். கொட்டாஞ்சேனை, வத்தளை பகுதிகளை வதிவிடமாகக் கொண்ட மேலும் ஆறு இளைஞர்களுமாக 11 இளைஞர்கள் அன்றைய தினம் கடற்படையினரால் அந்த வெள்ளை வாகனத்தில் கடத்தப்பட்டனர்.

கடத்தப்பட்ட 11 இளைஞர்களின் பெற்றோரும், உறவினர்களும் கொட்டாஞ்சேனை, வத்தளை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை செய்தபோதிலும் கடத்தப்பட்டவர்களைப் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இந்தநிலையில் கடத்தப்பட்ட 5 மாணவர்களில் இருவரான ரஜீவ் நாகநாதனும் விஸ்வநாதன் பிரதீப்பும் தங்களைக் கடற்படையினர் கடத்தி வைத்துள்ளனர் எனவும், கடற்படையை சேர்ந்த கடத்தல்காரர்கள் கேட்கும் தொகையை கொடுத்து தங்களை காப்பாற்றும்படியும் தமது தாய் தந்தையருக்கு அலைபேசியில் தொடர்புகொண்டு உரையாடினர். அந்த மாணவர்களின் பெற்றோர், கடத்தல்காரர்களை தொடர்பு கொண்டு தங்கள் பிள்ளைகளை மீட்க எவ்வளவோ முயற்சிகள் எடுத்தபோதிலும் அவை பலனளிக்கவில்லை. இதனால் கடத்தப்பட்ட ஐந்து இளைஞர்களின் சார்பாக ஆட்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்தாவது அவர்களை மீட்க பெற்றோர் முயன்றனர். மாணவன் ரஜீவ் நாகநாதன் சார்பில் அவரது தாயார் சரோஜா நாகநாதனும், பிரதீப் என்ற மாணவன் சார்பில் அவரது தந்தையார் விஸ்வநாதனும், மாணவன் திலகேஸ்வரன் சார்பில் அவரது தாயார் காவேரி ராமலிங்கமும் மனுதாரர்களாக பெயர் குறிப்பிடப்பட்டு, ஆட்கொணர்வு மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா தாக்கல் செய்தார்.

கடத்தப்பட்ட ஐந்து மாணவர்களும் (3 தமிழ் மாணவர்கள், 2 முஸ்லிம் மாணவர்கள்) மற்றைய ஆறு இளைஞர்களும் கொழும்பிலேயே பிறந்து வளர்ந்து கல்வி கற்றதுடன் வடகிழக்கோடு எந்தத் தொடர்பும் அற்றவர்கள். அதுமட்டுமின்றி விடுதலைப் புலிகளுடனோ வேறு எந்த சட்டரீதியற்ற அமைப்புக்களுடனோ எந்தவித தொடர்போ சம்பந்தமோ இவர்களுக்கு இருக்கவில்லை என்பதை புலனாய்வுப் பிரிவின் விசேட பொறுப்பதிகாரி நிசாந்த சில்வாவின் சாட்சியத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டது. மேலும் 11 இளைஞர்களை கடற்படையினர் கடத்தியது கப்பம் பெறுவதற்காகவே என்பதனைக் கடத்தப்பட்ட இளைஞர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் நீதிமன்றில் கூறிய சாட்சியத்தை புலனாய்வுப் பிரிவு விசாரணை அதிகாரிகளின் சாட்சியத்தோடு ஒப்புறுதிப்படுத்தப்பட்டது.

## கடற்படைத்தளபதி கரன்னாகொட முறைப்பாடு

அப்போதைய கடற்படைத் தளபதி அட்மிரல் கரன்னாகொடவின் உத்தரவுகளையும் கட்டளைகளையும் உடனுக்குடன் நிறைவேற்றுபவராகவும் மிகவும் நெருக்கமானவராகவும் நம்பிக்கைக்குரியவராகவும் செயற்பட்டவர் தான் கடற்படையைச் சேர்ந்த லெப்டினண்ட் கொமாண்டர் சம்பத் முனசிங்க. இவருக்கு எதிராக 2009 மே 28 ஆம் திகதி கொழும்பு குற்றப் பிரிவு (CCD) பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்கவிடம் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது. லெப்டினண்ட் கொமாண்டர் சம்பத் முனசிங்கவிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருந்ததாகவும், மோசடியான நிதிக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டாரெனவும் இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது. இந்த முறைப்பாட்டுக்கமைய, விசாரணைகளை கொழும்பு குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றியதையடுத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் லெப்டினண்ட் கொமாண்டர் சம்பத் முனசிங்கவுக்கு எதிரான விசாரணைகளை ஆரம்பித்தனர். கடற்படை லெப்டினண்ட் கொமாண்டர் சம்பத் முனசிங்கவின் உத்தியோகபூர்வ படுக்கை அறையைச் சோதனை செய்கையில், அந்த அறையிலிருந்து பல அடையாள அட்டைகளும் கடவுச் சீட்டுக்களும் கைப்பற்றப்பட்டு, அது தொடர்பில் கோட்டை நீதவான் நீதிமன்றில் விசாரணை அறிக்கைகளும் தாக்கல் செய்யப்பட்டன. மேலும் இந்த விசாரணையில் கடற்படை லெப்டினண்ட் கொமாண்டர் சம்பத் முனசிங்க மாணவர் கடத்தலில் பிரதான பங்கு வகித்தமையும் கண்டறியப்பட்டது. இந்தக் கடத்தலில் தொடர்புபட்ட கடற்படை அதிகாரிகளின் செயற்பாடுகளும் விசாரணையில் வெளிக் கொண்டுவரப்பட்டு விசாரணை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன.




### ஆட்கொணர்வு மனுவிசாரணை

ஆட்கொணர்வு மனுக்களின் விசாரணையில் மனுதாரர்கள் சார்பில் மாணவன் ரஜீவ் நாகநாதன் தாயார் சரோஜா நாகநாதன். பிரதீப் விஸ்வநாதன் சார்பில் அவரது தந்தையார் விஸ்வநாதனும், திலகேஸ்வரன் ராமலிங்கம் சார்பில் அவரது தாயார் காவேரி ராமலிங்கமும் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் சாட்சியம் அளித்தனர். குற்றப்புலனாய்வுப் பிரிவின் சிறப்பு விசாரணைப் பிரிவினரால் கோட்டை நீதிவான் நீதிமன்றில் விசாரணை அறிக்கைகளும் தாக்கல் செய்யப்பட்டன. இந்த விசாரணை அறிக்கைகளின் உள்ளடக்கங்களை நீதிமன்றப் பதிவாளரின் சாட்சியத்தின் மூலமும், குற்றப்புலனாய்வுப் பிரிவின் சிறப்பு விசாரணை அதிகாரி நிசாந்த சில்வா, கடற்படையை சார்ந்த ஜோன் கொத்தலாவெல, அலுத்கெதர உபுல் பண்டார, அட்ரியன் சம்பத், எம்.ஏ ஜயதிலக, ரஞ்சித் முனசிங்க, லெப்டினண்ட் கொமாண்டர் வெலகமார ஆகியோரின் சாட்சியங்கள் மூலமும் பல எதிர்பாராத திடுக்கிடும் விடயங்கள் வெளிவந்தன.

### நிசாந்த டி சில்வாவின் சாட்சியம்

புலனாய்வுப் பிரிவின் விசேட விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரியான நிசாந்த டி சில்வாவின் சாட்சியத்தினை நான் நெறிப்படுத்தினேன்.

“தெஹிவளையில் வைத்து கடத்தப்பட்ட ஐந்து மாணவர்கள் உட்பட மொத்தம் 11 பேர் கடற்படையினரால் கடத்தப்பட்டு முதலில் சைத்திய வீதியிலும் பின்னர் திருகோணமலை கடற்படை சித்திரவதை முகாமில் அடைத்து வைக்கப்பட்டனர். மாணவர்களை விடுதலை செய்வதற்குக் கப்பமாக ஒவ்வொருவரிடமும் ஒரு கோடி ரூபா கோரியமைக்கு சான்றுகள் காணப்படுகின்றன. 42 சாட்சியங்களை விசாரணைக்கு உட்படுத்தி, சைத்திய வீதியிலுள்ள தடுப்பு முகாமையும் திருகோணமலையில் அமைந்துள்ள கடற்படை சித்திரவதை முகாமையும் எனது தலைமையிலான விசாரணைக்குழு சென்று பார்வையிட்டது. அங்கு விசாரணை நடத்தியதில் வெளிவந்த சான்றுகளின் அடிப்படையிலேயே நான் இங்கு சாட்சியம் அளிக்கின்றேன்” என்ற பீடிகையுடன் அவர் தனது சாட்சியத்தை நீதிமன்றில் பதிவு செய்யத் தொடங்கினார்.


### திருகோணமலை இரகசியத் தடுப்பு முகாம்

“ஐந்து மாணவர்கள் கடத்தப்பட்டு காணாமல்போன சம்பவத்துடன் கடற்படையைச் சேர்ந்த லெப்டினண்ட் கொமாண்டர்களான சுமித் ரணசிங்க, ஹெட்டிஆராச்சி, பிரசாத் சந்தன, சம்பத் முனசிங்க ஆகிய நால்வருக்கும் எதிராகச் சான்று உள்ளன. கடற்படை முகாமில் மாணவர்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்தமையைகடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவும், கடற்படைப் பேச்சாளர் திசாநாயகாவும் நன்கு அறிந்திருந்தனர். கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட நினைத்திருந்தால் இந்த மாணவர்களை விடுதலை செய்திருக்கலாம்” என அவர் வழங்கிய சாட்சியம் நாடெங்கும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசேட விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி நிசாந்த டி சில்வா நீதிமன்றில் பாரப்படுத்திய பகுப்பாய்வு அறிக்கையில், ‘திருகோணமலையில் கடற்படையினரின் இரகசியத் தடுப்பு முகாமில் பெருந்தொகையான எலும்புக் கூடுகள் மற்றும் மனித எச்சங்கள் காணப்பட்டன’ என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசைகாட்டி தீர்வு தருமா?



ந.பரமேஸ்வரன்

தேசிய மக்கள் சக்தியின் வரலாறு காணாத வெற்றி தமிழ் மக்கள் மத்தியில் பல சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது. முக்கியமாக இனப்பிரச்சினை தொடர்பாக தேசிய மக்கள் சக்தி முன்வைக்கவுள்ள தீர்வு என்ன என்ற கேள்வி அனைத்துத் தமிழ் மக்களின் மனங்களிலும் ஊசலாடுகிறது. தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியைச் சந்தேகக்கண்கொண்டு பார்ப்பதில் எதுவித தவறுமில்லை.

ஏனெனில் ஜே.வி.பி.யின் கடந்தகால செயற்பாடுகள் தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே காணப்பட்டுள்ளன.

ஜே.வி.பி. ஓர் இனவாதக் கட்சி என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஜே.வி.பி.யினது ஸ்தாபகர் ரோகண விஜயவீர ஆரம்பத்தில் சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இருந்து தமிழனின் தலைமைத்துவத்தின் கீழ் செயற்பட விரும்பாத காரணத்தாலேயே ஜே.வி.பி.யை உருவாக்கினார் என கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தரான சிங்களவர் ஒருவர் சில வருடங்களுக்கு முன்னர் வெளியிட்ட சண்முகதாசனின் வாழ்க்கைக் குறிப்புகள் பற்றிய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கை சட்டரீதியாகப் பிரித்தது ஜே.வி.பி. தான். சுனாமிக் கட்டமைப்பில் புலிகளை இணைத்துக்கொள்ளக்கூடாது என போர்க்கொடி தூக்கியவர்களும் ஜே.வி.பி.யினரே. ஜே.வி.பி.யாக இருந்து பிளவுபட்ட இரண்டு கட்சிகளும் இப்போது (தேசிய மக்கள் சக்தி, முன்னிலை சோஷலிச கட்சி) இனவாதத்தை வெறுக்கின்றன என்பதையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

"எமது ஆட்சியில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு அதனூடாக இனப்பிரச்சினை தீர்க்கப்படும்" என தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின்போது கூறிவந்தது. ஆனால் தேசிய மக்கள் சக்தியின் தீர்வுத்திட்டம் நிச்சயமாக தமிழர்கள் கோருவது போன்று வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டியாக இருக்காது. மாகாணசபைகளைவிடக் கூடுதலான அதிகாரங்களைக் கொண்டிருக்கும் என நம்பலாம்.

சில வருடங்களுக்கு முன்னர் தமிழ்க் கட்சியினர் அனைவரும் ஒன்றிணைந்து 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கு கடிதம் எழுதினார்கள் . ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 13 ஆவது திருத்தம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு அல்ல (13க்கு அப்பால் செல்ல வேண்டுமென) என ஆரம்பம் முதலே கூறிவருகிறார்.

மைத்திரி,ரணில்,சுமந்திரன் நல்லாட்சி அரசாங்கத்தில், ரணில்-சுமந்திரன் கூட்டுத் தயாரிப்பான தீர்வுத் திட்டத்தை அமுல்படுத்தப்போவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதித் தேர்தலின்போது தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே கடந்த மே மாதம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மாத்தறையில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் மகளிர் அணி மாநாட்டில் உரையாற்றுகையில் "இந்தியாவில் காந்தியும்,நேருவும், பட்டேலும் தோன்றிய காலப்பகுதியில் இலங்கையில் சேனநாயக்காக்களும்,பண்டாரநாயக்காக்களும் தோன்றினர். இந்தியத் தலைவர்கள் ஒன்றுபட்ட இந்தியாவைக் கட்டியெழுப்பிய வேளையில் இலங்கைத் தலைவர்கள் இனவாதத்தைக் கட்டியெழுப்பினார்கள். இதன்காரணமாக இன்று இந்தியா சந்திராயனை அனுப்புகிறது. இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கி மீண்டெழ முடியாமல் தவிக்கிறது" எனக் கூறினார்.

இந்த வார்த்தைகள் வெறுமனே ஜனாதிபதியின் உதட்டிலிருந்து வந்த வார்த்தைகள் அல்ல. உள்ளத்திலிருந்து வந்த வார்த்தைகள். ஜனாதிபதி இந்த விடயத்தை யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்திருந்தால் அவரைப் பாரம்பரிய சிங்கள அரசியல்வாதிகளின் வரிசையில் வைத்து நோக்கலாம். ஆனால் தனிச்சிங்களப் பிரதேசமான மாத்தறையில் அதுவும் கட்சிக் கூட்டத்தில் வைத்தே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் தமிழர்கள் ஏமாற்றப்பட்டால் அது தமிழர்களின் தலையெழுத்து என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால், இம்முறை தமிழர்கள் ஏமாற்றப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே காணப்படுகின்றன. தேசிய மக்கள் சக்தி இனப்பிரச்சினைத் தீர்வில் இதயசுத்தியுடன் செயற்படுகிறது. வழமையாக இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முட்டுக்கட்டை போடும் பௌத்த பீடாதிபதிகளிடையேயும் மனமாற்றம் ஏற்பட்டுள்ளது. மகாசங்கத்தினரும் ஜனாதிபதியுடன் ஒத்துழைத்துச் செயற்படுமாறு ஏனைய சிங்கள அரசியல்வாதிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளனர். அத்துடன் அமெரிக்கா, ஜப்பான், ஐ.நா. என்பன ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே, பதவியேற்கவுள்ள ஜனாதிபதி இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டுமென உறுதியாகத் தெரிவித்துள்ளன.

கடந்தகாலங்களைப் போன்று ஆளும் கட்சி கொண்டுவரும் தீர்வுத்திட்டத்தை எதிர்க்கட்சி எதிர்க்கும் சூழலும் தற்போது இல்லை. சில வேளை சஜித் பிரேமதாஸ எதிர்ப்புக்காட்டினால் சரி. இல்லையெனில் தேசிய மக்கள் சக்தியின் தீர்வுத்திட்டத்தை ஆதரிக்கவோ எதிர்க்கவோ எவருமில்லை. தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு வழங்கக்கூடாது என்று ஓலமிடுவதற்கு சிங்கள இனவாதிகள் ஒருவரும் நாடாளுமன்றத்தில் இல்லை. 1977 ஆம் ஆண்டு ஜே.ஆர். பதவியேற்றதைப் போன்ற அறுதிப்பெரும்பான்மையுடன் அநுர பதவியேற்றுள்ளார். தோல்வியடைந்த அரசியல்வாதிகள் சிலர் 2/3 பெரும்பான்மை 1977 இனைப் போன்று சர்வாதிகாரத்துக்கு வழிவகுக்கும் எனக் கூச்சலிடுகின்றனர்.

ஆனால் ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஜே.ஆர்.பதவி விலகும் வரை அவரை 'அதி உத்தம' என்று விளித்தே கடிதங்கள் அனுப்பப்பட்டதுடன் ஊடகங்களும் 'அதி உத்தம' என்றே ஜே.ஆர். இனை விளித்தன. அநுர தன்னைத் தோழர் என அழைக்குமாறே உத்தரவிட்டுள்ளார். ஜே.ஆர். அரசியல்வாதி, அநுர யதார்த்தவாதி. அத்துடன் நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கி யுள்ள சூழலில் கஜானா காலியாகவுள்ள நிலையில் நாட்டைக் கொண்டு செல்வதற்கு உள்நாட்டு, புலம்பெயர் தமிழர்களின் ஒத்துழைப்பும் அவசியம்.

ஆர்.பிரகாஷ்

# ஆட்சியை இழக்கிறாரா பிரதமர் ட்ரூடோ?

கனேடிய லிபரல்களுக்கு நாளைய பகல் தீர்க்கமானது. பிரதான எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான பியர் பொலியேவ் ஆளும் கட்சிக்கு எதிராக முன்வைத்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாளை வாக்கெடுப்புக்கு வரும் நிலையில், ஆட்சிக் கவிழ்ப்பா அல்லது உயிர்ப்பிழைப்பா என்ற நிலையில்தான் நாளைய நாடாளுமன்ற அமர்வை பிரதமர் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சியினர் எதிர்கொள்ளவுள்ளனர்.


அமெரிக்க அதிபராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ட்ரம்ப், போதைப்பொருள் கடத்தல்காரர்களையும், சட்டவிரோதக் குடியேறிகளையும் கட்டுப்படுத்தாவிட்டால் கனேடிய ஏற்றுமதிப் பொருள்களுக்கு 25 வீத வரி அறவிடப்படும் என்று அறிவித்துள்ளார். ட்ரம்பின் இந்த அறிவிப்பு நடைமுறைக்கு வந்தால் கனடாவின் பொருளாதாரம் பாதாளத்தில் விழும். எனவே, ட்ரம்புக்கு ஐஸ் வைத்து, வரி அதிகரிப்பை மேற்கொள்ளும் நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றார் பிரதமர் ட்ரூடோ.

கனடாவின் 80 வீதமான உற்பத்திகளுக்குச் சந்தையாக அமெரிக்கா உள்ளதால், ட்ரம்ப் எள் என்றால் எண்ணெயாக நிற்கின்றார் ட்ரூடோ. கனடா இறைமையுள்ள ஒரு நாடு என்றோ, தான் நான்கு கோடி கனேடியர்களின் 'கௌரவப் பிரதிநிதி' என்றோ எண்ணிக் கொள்ளாமல் வரிச் சலுகையைப் பெறுவதற்காக, ட்ரம்பின் முன்பாக வளைந்து குனிந்து நெளிந்து பம்பரமாடுகின்றார் கனேடியப் பிரதமர். 'அஹிம்சையும் ஓர் அளவுக்குத்தான்' என்பதுபோல், பிரதமர் ட்ரூடோவின் கேலிக்கூத்தை இனியும் சகிக்கமுடியாது என்ற நிலையில், லிபரல் கட்சிக்கான ஆதரவைத் திரும்பப் பெறுவதாகவும், அந்தக் கட்சிக்கு எந்தவொரு விடயத்திலும் ஆதரவு வழங்கப்படாது என்றும் புதிய ஜனநாயகக் கட்சி அறிவித்துள்ளது.

இதற்கு முன்பு பொலியேவால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளின்போது பிரதமர் ட்ரூடோவையும், லிபரல்களையும் காப்பாற்றிக் கரைசேர்த்த பெருமை புதிய ஜனநாயகக் கட்சிக்கு உண்டு. எனவே, அவர்களின் ஆதரவு இல்லையென்றால், ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்ற பெருவிருப்பிலேயே, எதிர்க்கட்சித் தலைவர் பொலியேவ் நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்திருந்த நிலையில், அந்தப் பிரேரணை நாளை வாக்கெடுப்புக்கு வரவுள்ளது.


லிபரல்களின் ஆட்சி கவிழுமா அல்லது தக்கவைக்கப்படுமா என்பதில் துல்லியமானதொரு பதிலைச் சொல்லமுடியாத நிலையே தற்போது ஏற்பட்டுள்ளது. புளொக் கியூபெக்குவா கட்சி லிப ரல்களைக் காப்பாற்றச் சாத்தியம் உள்ள போதிலும் புதிய ஜனநாயகக் கட்சியினர் பொலியேவ் தரப்புடன் இணையும் பட்சத்தில், இந்தக் குளிர்காலத்திலும் லிபரல்களுக்கு அனலடிக்கும்.

பிரதமர் ட்ரூடோ இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் அன்பும் கரிசனையும் உடையவர். இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்ற தீர்மானம் கனேடிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமைக்குக் காரணமும் அவரே. ஆனால், பொலியேவும் அதேகொள்கைகளைத்தான் உடையவர் என்பதால் கனடாவின் இடம்பெறும் ஆட்சிக்கான போராட்டம் எம்மைப் பெருமளவில் தாக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புக்குரிய ஜனாதிபதிக்கு...



## அவசரமா ஒரு கடுதாசி

*வணக்கம்.*

நீங்கள் பதவிக்கு வந்த உடன ஒரு கடிதம் எழுதினான். உங்களுக்கு அப்ப அதை வாசிக்க நேரம் இருந்திருக்காது எண்டு நினைக்கிறன். என்னத்தைச் சொன்னாலும் அப்ப நாடாளுமன்றத் தேர்தலைப் பற்றி ஒரு பதற்றம் இருந்திருக்கும். ஆனால் இப்ப கொஞ்சம் ஆசுவாசுவமாக இருப்பியள் எண்டு நினைச்சன். ஆனால் இப்ப அதைவிட ரென்சனா இருக்கிறியள்போல கிடக்கு.

உங்களுக்கு சர்வதேசத்தின்ரை நெருக்குவாரம், ரணிலின்ரை நெருக்குவாரம், மஹிந்தவின்ரை நெருக்குவாரம், அதோடை புலி வந்திட்டுது, பூனை வந்திட்டுது எண்டு விஷப்பாம்புகள் கொஞ்சம் கிடந்து கத்துதுகள். இடைக்கிடை மாரித்தவக்கை மாதிரி நாமலும் தான் இருக்கிறதெண்டு காட்ட ஏதேதோ எல்லாத்தையும் எழுதி வாசிக்கிறமாதிரி இருக்கு. அதெல்லாத்தையும் காதிலை வாங்கதையுங்கோ. நாமல் ஒரு கிளிப்பிள்ளை . அந்தாளுக்குச் சொந்த மூளை கிடையாது. சொன்னதைச் சொல்லும் லவுட் ஸ்பீக்கர் மாதிரி ஆரேன் சொல்லிக் குடுக்கிறதைப் பிலத்துக் கத்திச் சொல்லுவார் அவ்வளவுதான்.

தமிழ் அரசியல்வாதியளிட்ட"தேசியம்" இருக்கிற மாதிரி, சிங்கள அரசியல்வாதியளிட்ட "புலி" கையுக்கை இருக்கு. எதுக்கெடுத்தாலும் மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுறமாதிரி சம்பந்தமில்லாமல் எதையாவது சொல்லிப்போட்டுப் "புலியைக்"கொண்டு வந்து இடையிலை புகுத்துவினம். புலி அரை உயி



ரோடை கிடக்கு. காத்துப்பட உயிர்த்துவிடும். அடிச்சுச் சாக்காட்ட வேணும் எண்டது அவையின்ரை அட்வைஸ். அப்பிடி எங்கடை ஆக்களின்ரை விளையாட்டு. எங்கடை தமிழ் அரசியல்வாதிகளிட்ட பார்லிமெண்டுக்கை இருக்கிற தமிழ் அக்கறை வெளியாலை இல்லை.

பாடசாலைப் பிள்ளையளுக்கு "வீட்டு வேலை" செய்யக் குடுக்கிறமாதிரி "ஹோம் வேர்க் செய்திட்டு வாங்கோ, உலக நடப்பைப் பற்றிக் கொஞ்சம் படிச்சுத் தெரிஞ்சு கொண்டு வாங்கோ ,அப்பதான் தமிழ் மக்களுக்குப் பார்லிமெண்டுக்காலை ஏதாவது செய்யலாம்" எண்டு சொல்லுங்கோ. இல்லாட்டி உங்கடை பேச்செல்லாம் 'ஹன்சாட்' பக்கங்களை நிரப்பிறதாத்தான் இருக்கும் எண்டதையும் மறக்காமல் சொல்லுங்கோ.

அது மட்டுமில்லை எங்கடை தமிழ் பேசுற அரசியல்வாதியள் ஒருபக்கம் பார்லிமெண்டுக்கு வந்து பேசுறம் எண்டு சொல்லிக்கொண்டு ஏதேதோ எல்லாம் புசத்திற மாதிரிக்கிடக்கு. பொது வெளியிலை என்ன நடக்குது எண்டு ஒண்டும் தெரியாது. பேப்பரைத் தன்னும் வாசிக்கினமோ தெரியாது. அவைக்குப் பார்லிமெண்டில பேசுறதுக்கு எண்டு எழுதிக் குடுக்க ஆக்களைச் சம்பளத்துக்கு வைச்சிருக்கினம். அவையள் தான் இவையளுக்காகப் பேப்பர் வாசிக்கிறது, நெற் பாக்கிறது, யூரியுப்பைப் பாக்கிறது எண்டு எல்லாத்தையும் சேர்த்து சாம்பாறாக்கி எழுதி இவையின்ரை கையிலைகுடுக்கஅவை அதைக்கொண்டுவந்து வாசிப்பினம். ஒரு இன்மை வறுமை தெரியாது. அதிலை சில காலாவதியான விசயங்களும் வரும். அவையின்ரை பிரச்சினை பார்லிமெண்டிலை ஏதாவதைப் பேசவேணும். அதுக்கை ஏதாவது தமிழற்ற கதையளச் சொல்லவேணும், அவ்வளவுதான்.

போனமுறை அவை வந்து பார்லிமெண்டிலை பேசின பேச்சிருக்கே அதுதான் இந்தக் கிழமையின்ரை பகிடி. முதலிரவுக்குப் போற பொம்பிளைக்குச் சொல்லிவிடுற மாதிரி, இந்தியாவோட ஒத்துப் போங்கோ, அமெரிக்காவோட கவனம், சீனாவிட்ட இதைக் கேளுங்கோ எண்ட மாதிரியான புத்திமதியை உங்களுக்குச் சொல்லி இருக்கினம். அப்பிடி வகுப்பெடுத்தால் பறவாயில்ல உங்கடை பேச்சில நீங்கள் என்ன என்னத்தைச் சொல்லி இருக்கிறியள் எண்டு கேளாமல், எப்பிடி அரசாங்கத்தைக் கொண்டு போகப் போறம் எண்டு சொன்னதை விளங்கிக் கொள்ளாமல் வகுப்பெடுக்கிறதுதான் சரியான துயரம். அது அவையின்ர பிழை இல்லை. தாங்கள் என்னத்தையாவது சொல்லிக்கொண்டு இருக்க வேணும். இல்லாட்டி ஆக்கள் தங்களை மறந்து போயிடுவினம் எண்டு ஒரு மனப்பயம்.

இப்ப மட்டுமில்லை இப்ப பத்துப் பதினைஞ்சு வருஷம் இப்படியான குத்துமுறிவுகளைப் பாத்துக்கொண்டு இருக்கிறதால உவையின்ர விளையாட்டெல்லாம் உங்களுக்கு அத்துப்படி எண்டு நினைக்கிறன்.

அங்கை இப்ப வந்து தமிழ்ரில உள்ள கரிசனையிலதான் பேசுறம் எண்டு சொல்லுறவையிட்டக் கேளுங்கோ "போரிலை பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பற்றின முழு விவரத்தையும் எடுத்து வைச்சிருக்கிறியளோ? காணாமல் ஆக்கப்பட்ட ஆக்களின்ர விவரம் முழுசா இருக்கோ? 2009க்குப் பிறகு தமிழ்ச் சமூகத்தின்ர போக்கு என்ன எண்ட ஆய்வு இருக்கோ? அவைக்கு இப்ப என்ன உடனடியாத் தேவை எண்ட விவரம் இருக்கோ? வட பகுதியில கல்வி விழுந்துபோச்சு எண்டு சொல்லுறது சம்பந்தமா ஏதாவது விவரம் இருக்கோ? முதலில தமிழர்கள் தொடர்பா நீங்கள் செய்துவைச்சிருக்கிற பைல்களைக் கொண்டு வாங்கோ, அதைப் பாத்திட்டு மிச்சத்தக் கதைப்பம். அப்ப தெரியும் தமிழ் மக்களில அக்கறை ஆருக்கு இருக்குதெண்டு!" இப்பிடிக் கேட்டால் அவையள் பிடரியில கால்பட ஓடிப்போடுவினம்.

ஒரு புதினம் தெரியுமோ? இப்ப எங்கடை எம்.பி.மார் கொஞ்சப்பேர் மறந்துபோயும் யன்னலுக்குள்ளால கூட எட்டிப் பாக்கிறேல்லையாம். யன்னல் கம்பிக்குள்ளால பாக்கேக்கை ஜெயிலுக்கை நிக்கிறமாதிரி ஒரு நினைவு வருகுதாம். அதால கம்பி வைச்சுக் கட்டின யன்னல்களை மறைச்சுக் கட்டவேணும் எண்டும் யோசிக்கினமாம்.

இனிமேல் பொதுச்சொத்தில கைவைச்சால் என்ன நடக்கும் எண்டு எல்லாருக்கும் தெரியிற மாதிரி நீங்கள் எடுக்கிற முடிவுகள் இருக்கவேணும். நாட்டின்ர அபிவிருத்தி எண்டதிலும் பாக்க "ஊழல்" முக்கியம். இப்பிடியான கொள்ளைக் கூட்டத்தையும் வைச்சுக்கொண்டு அபிவிருத்தி செய்யேலாது எண்டதை நான் சொல்லத் தேவை இல்லை. அது உங்களுக்கும் அத்துப்படி. ஏதோ சனம் மூண்டில் இரண்டு தந்திருக்கு. பயப்பிடாமல் விளையாடலாம். அவையளை 'மாமியார்' வீட்டை அனுப்புற விசயத்தை மட்டும் மறக்காதையுங்கோ.!

இப்படிக்கு
*அப்பாவி அன்னமுத்து*



# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்

ந.பரமேஸ்வரன்

உலகம் அறிந்த பெயர் சுபாஷ் சந்திரபோஸ். யாழ்ப்பாண மக்கள் கூட அறியாத பெயர் சுந்தரலிங்கம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்திய சுதந்திரப்போராட்ட வீரர் சுபாஷ் சந்திரபோஸ். சுபாஷ் சந்திரபோஸின் 'பிரேம்' போட்ட படம் இப்போதும் யாழ்ப்பாணத்திலுள்ள சில வீடுகளில் காணப்படுகிறது. சுபாஷ் சந்திரபோஸும் சுந்தரலிங்கமும் இந்திய நிர்வாகசேவைப் பரீட்சைக்குத் தோற்றினர். சுபாஷ் சந்திரபோஸ் பரீட்சையில் தோல்வியடைந்தார். சுந்தரலிங்கம் சித்தியடைந்தார். சுபாஷ் சந்திரபோஸ் இரண்டாவது வருடமே பரீட்சையில் சித்தியடைந்தார்.

9

இந்த விடயத்தை அண்மையில் கனடாவில் காலமான ஈழ விடுதலைப்போராட்டத்தின் முன்னோடிகளுள் ஒருவரான ஈழவேந்தன், சுந்தரலிங்கத்தின் 101 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு கொழும்புப் பத்திரிகை ஒன்றில் எழுதியிருந்தார்.

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இந்திய நிர்வாகசேவைப்பரீட்சை(ICS) Indian Civil Service என அழைக்கப்பட்டது. இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தால் இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளிலும் பணிபுரியலாம். இந்தப் பரீட்சை இப்போது (IAS) Indian Administrative Service என அழைக்கப்படுகிறது .


இலங்கையில் (CCS) Ceylon Civil Service எனவும் பின்னாளில் (CAS) Ceylon Administrative Service எனவும் அழைக்கப்பட்டது. இப்போது (SLAS) Sri Lanka Administrative Service என அழைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தைகள் கவனம்

○ கோகுலராகவன்

ஹென்றி வேர்ட்ஸ்வேர்த் லோங்ஃப்லோ (Henry wardsworth longfellow) 19 ஆம் நூற்றாண்டின் அற்புதமான அமெரிக்கக் கவிஞர். அவரைப் பற்றி முன்னர் ஒரு பதிவில் சொல்லியிருக்கிறேன். இன்று அவரது அம்பும் ஒரு பாடலும் ("The Arrow and the Song") என்ற கவிதையைத் தமிழில் பார்க்கலாம்.




## அம்பும் ஒரு பாடலும்

*காற்றில் ஒரு அம்பை எய்தேன்.*
*அது பூமியில் விழுந்தது.*
*ஆனால் எங்கே என்று தெரியவில்லை.*
*அது மிக வேகமாகவே பறந்து போனது.*
*அது போன திசை*
*என் பார்வைக்கு*
*புலப்படவே இல்லை.*

*காற்றில் ஒரு பாடலைப் பாடினேன்.*
*அது பூமியில் பரவியது.*
*ஆனால் எங்கே என்று தெரியவில்லை.*
*அந்தப் பாடலை யார் தெளிவாகவும்*
*ஆழமாகவும் உணர்ந்து கொண்டவர்களோ?*

*நீண்ட காலத்திற்குப் பிறகு*
*அந்த அம்பு ஒரு 'ஓக்' மரத்தில்*
*குத்தியபடி இருந்ததைக் கண்டேன்.*
*அது இன்னும் முறியவில்லை.*
*என் பாடல்*
*அது என் நண்பனின் இதயத்தில்*
*முழுவதுமாய் நிறைந்திருந்தது.*



கவிஞர் இந்தக் கவிதையில் சொல்லும் செய்தியையோ, பகிர்வையோ உங்களால் என்னவென்று உணரமுடிகிறதா? இது மிக எளிமையான கவிதை. ஆனால் ஆழமான கவிதை. கவிஞர் அம்பையும், பாடலையும் தன் கருத்தைச் சொல்லப் பயன்படுத்தியதில் கவிதையின் கரு அடங்கியிருக்கிறது. அதை என்னவென்று காணலாம்.

உலகில் பேசத்தெரிந்த விலங்கு மனிதன் மட்டுமே. இதற்குச் சொற்களும், வார்த்தைகளும் பயன்படுகின்றன. மொழி மனிதனுக்குக் கிடைத்த மிகப்பெரிய வரம். ஆனால் இந்த மொழியை நல்லவிதமாகப் பயன்படுத்துகிறோமா? என்பது கேள்விக்குரியது.

ஏனெனில் மற்றவர்களைக் காயப்படுத்தி உரையாடுவது மனிதனின் மிக விசித்திரமான கெட்ட குணங்களில் ஒன்று.

நாம் சொல்லும் வார்த்தை அடுத்தவர்களின் மனதைப் புண்படுத்தும் ,சோர்வை ஏற்படுத்தும் என்பதை ஒருபோதும் நாம் உணர்வதில்லை. அதேவேளை நல்ல கனிவான வார்த்தைகள் மற்றவர்களைச் சாந்தப்படுத்தும், எம் மீது அன்புகொள்ள வைக்கும் என்பதையும் உணர்வதில்லை அல்லது ஏற்றுக்கொள்வதில்லை. எங்களுக்கு எமது மொழியில் அதிகம் தெரிந்தவை கெட்ட வார்த்தைகளும், கெட்ட சொற்களும் என்றே எனக்குத் தோன்றுகிறது. இதனால் எமது மொழியில் அதிமாக இருப்பது கெட்ட வார்த்தைகள் என்று அர்த்தமில்லை.




நாம் நல்ல நல்ல வார்த்தைகளைத் தேடிக் கொள்வதில்லை என்பதே உண்மை. இந்தக் கவிதையில் கவிஞர் கெட்ட வார்த்தைகளை அம்பாகவும் நல்ல வார்த்தைகளை இனிய பாடலாகவும் உவமிப்பதைக் காணமுடிகிறது. இதுவே இந்தக் கவிதையின் பிரதான கருவாக அமைகிறது. இன்னும் பல கருக்கள் இருக்கலாம். அவற்றைத்தாண்டி அன்புக்கு மட்டுமே முதலிடம் தரவேண்டும் என்கிறார் கவிஞர், ஆபிரகாம் லிங்கனிடம் ஒரு பிச்சைகாரன் பிச்சை கேட்டபோது அவனுக்கு கொடுக்க அவரிடம் பணம் இருக்கவில்லை. சட்டைப்பையைத் தடவிப்பார்த்துவிட்டு அந்தப் பிச்சைக் காரனின் தோளில் கைவைத்து

"தம்பி இன்று உனக்குத் தர பணம் இல்லை நாளை வா தருகிறேன்" என்றாராம்.

அதற்கு அந்தப் பிச்சைகாரன்

"ஐயா நீங்கள் தம்பி என்று அழைத்ததே என்னைப் பெரிய பணக்காரன் ஆக்கிவிட்டது "

என்று அழுதபடி சொன்னானாம்.

இத்தனைக்கும் பிச்சைக்காரனுக்கு ஆபிரகாம் லிங்கன் ஒரு பெரிய ஆள் என்பது பற்றி எதுவும் தெரியாது. இங்கே சிறியவர், பெரியவர் என்ற பேதம் தேவையில்லை.

சாமானிய மனிதனோடு அன்பாக உரையாடவேண்டும். இதுவே கவிஞர் ஹென்றி லோங்பெல்லோவின் கவிதையின் வேண்டுகோள்.

வள்ளுவர் கூட இந்தக்கருத்துப் புலப்படுமாறு.

*தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினாற் சுட்ட வடு*

என்று சொல்லியிருக்கிறாரே.

மேலைத்தேயமும் கீழைத்தேயமும் எவ்வாறு அற்புதமாகப் பொருந்துகிறது பார்த்தீர்களா? ■

# ஊர்ப்புதினம்

பாகம் 3

○ இராகவன்

தீபாவளிக் கார்ட்டுகள் இரண்டு விதமாயிருக்கும். ஒண்டுசாதாரண போஸ்கார்ட் சைஸிலயிருக்கும். அதில பின்னுக்கு முத்திரை ஒட்டுறதுக்கும் இடமிருக்கும். அதில முத்திரையொட்டி சரியான விலாசம் எழுதியனுப்பினால் உரியாளுக்குப் போய்ச்சேரும். ஆனால் ஒருத்தரும் அதைச் செய்யிறேல்ல. அனுப்பிறாள் ஆருக்கு அனுப்பவேணுமோ அவரின்ரை பெயரைக் கார்ட்டின்ர பின்பக்கம் எழுதி அதோட சேர்த்து கவிதை மாதிரி அடுக்கு மொழியில சில வசனங்களும் எழுதி முத்திரையொட்டுற இடத்தில "முத்திரை வீட்டில் நித்திரை" எண்டோ அல்லாட்டில் "முத்திரை தட்டுப்பாடு" எண்டு எழுதியோ (சிலதுகள் முத்திரையொட்டுற இடத்தில புள்ளடியும் போடுங்கள்) அந்தாளின்ரை புத்தகங் கொப்பியளுக்குள்ளையோ, புத்தகப்பைக்குள்ளையோ இரகசியமாக வைச்சு விடுகிறதுதான் வழமை.

அதிலயும் தீபாவளிக்கார்ட்டில எழுதிற அடுக்கு வசனங்கள்தான் இன்னும் பம்பலாயிருக்கும். அதுகளில வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிலதுகளைப் பாப்பம். "ஆழ்கடல் வற்றினாலும் என் அன்புக்கடல் வற்றாது", "தங்கச்சங்கிலி அறுந்தாலும் என் அன்புச் சங்கிலி அறாது", "சுடச் சுடத் தேநீர்குடி! சுட்டால் என்னை நினை!", "எந்த றோஜா வாடினாலும் இந்த அன்பு றோஜா வாடாது", " தேரிலே போனாலும் காரிலே போனாலும் இந்த அன்பு என்றும் மாறாது" எண்டு இப்பிடிக் கனக்க இருக்கு. சாதாரண போஸ்கார்ட் சைஸிலயிருக்கிற தீபாவளிக் காட்டைச் சிங்கிள் சைஸ் எண்டு சொல்லுவினம். இதுக்கு "என்வலப்" வராது. மற்றது டபிள்சைஸ், இரண்டு பக்கமும் விரிக்கக் கூடியதாயிருக்கும். இதுக்கு வெள்ளை "என்வலப்பும் " தருவினம். இந்த டபிள்சைஸிலயும் இரண்டு வகையிருக்கு. ஒண்டு நோமல், மற்றது ஸ்பெஷல், இது கட்டிங் அயிற்றமாயிருக்கும். முன்பக்கம் ஒரு படமிருக்கும். அதை எடுத்து விரிச்சால் உள்ளுக்குள்ள வேற படமிருக்கும். இந்த அயிற்றம் கொஞ்சம் விலை கூடினதெண்டதால எங்கட ஊர்க்கடையளில விக்கிறேல்ல. இதுக்கு வேற கடையளிருக்கு.

08

இதில இரண்டு கடையள் பேமஸ். ஒண்டு ராஜேஸ்வரன் கடை. இந்தக் கடை நான் முந்தி ஊர்ப்புதினத்தில குறிப்பிட்டிருக்கிற சிவாப் பெரியப்பா எண்ட சிவசிதம்பரம் எம். பி. வீட்டுக்கு முன்னாலயிருந்தது. அரசண்ணா எண்டொராள் "மாணவர் கலாசாலை" எண்ட பெயரில அப்ப ரியூட்டறி நடத்தினவர். ஓ.எல். வகுப்பு வரைக்கும் அங்கை வகுப்புகள் நடந்தன. அரசண்ணா ஏ.எல். வகுப்புக்கு நெல்லியடி சயன்ஸ் சென்ரர் ஒழுங்கைக்குள்ள "கிளாஸ்க்கோ" எண்ட பெயரிலயும் ஒரு ரியூசன் நடத்தினவர். அதிலதான் என்ர மூத்தண்ணர் கொமர்ஸ் படிப்பிக்கத் தொடங்கினவர். இந்த அரசண்ணாவின்ர சகோதரந்தான் ராஜேஸ்வரன் அண்ணை. "மாணவர் கலாசாலை" ரியூசனுக்கு அடுத்ததா அந்தக் கடையிருந்தது. கடையோடதான் அவையின்ர வீடுமிருந்தது. அந்தக் கடையில எரிபொருள் தவிர மற்றெல்லாச் சாமானும் விக்கிறவை. குறிப்பா பாடசாலை உபகரணங்கள் விக்கும். புருஸ்லீ, நைற்ரைடர், சுப்பர்மான் ஸ்ரிக்கர் எல்லாம் அமோகமா விக்கும். அதோட விதவிதமாத் தீபாவளிக் கார்ட்டுகளும், அந்தச் சீசனுக்கு வந்து குவியும். இண்டைவரைக்கும் நான்வாங்க விரும்பின ஒரு தீபாவளிக்கார்ட் எனக்குக் கிடைக்கவேயில்லை. அதைப் பற்றி வாற கிழமை சொல்லுறன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமல்ராஜ் பிரான்சிஸ்

# 'பார்' இல்லா ஊரில் 'குடி' இருக்காதா?

இப்போது பரவலாகப் பேசப்படும் விடயம், மதுபான அனுமதிப்பத்திர விவகாரம் தான். இந்த 'பார் பெர்மிற்' பெறுவது எப்போது தவறானதாக இருக்கும்?

- சட்டத்திற்கு முரணாக போய் உரிமத்தைப் பெறுவது.
- நாடாளுமன்ற உறுப்பினர் என்கிற சலுகையையும், தொடர்புகளையும் வைத்து அதனூடாக உரிமத்தைப் பெறுவது.

இதில் உரிமம் முறைப்படி பெறப்பட்டிருந்தால் இங்கு சட்டச்சிக்கல் இல்லை என்று நினைக்கிறேன்.

ஆனால், இங்கு 'பாதிப் பேரை விசனமடைய வைப்பது இந்த இரண்டாவது காரணம்தான். பார் பெர்மிற் போன்றவற்றைப் பணமிருந்தாலும் சாதாரண ஒரு நபரால் அவ்வளவு இலகுவாக பெற்றுக்கொள்ளமுடியாது என்று நினைக்கிறேன். இப்படித்தான் நம்முடைய சிஸ்டம் இருக்கிறது. ஆகவே, அதிக பணம் கொடுத்து, ஒரு எம்.பி. ஊடாக இதைப் பெறுவது இலகுவானது. இந்தக் குறுக்குவழியைத் தான் பலர் செய்திருக்கிறார்கள்.

இங்கு பிரச்சினை பணம் கொடுத்து வியாபாரத்துக்காக உரிமம் வாங்கியவரல்லர், தன் பதவியையும், பதவியால் கிடைத்த அறிமுகத்தையும் வைத்து அதை வாங்கிக் கொடுத்தவர் எம்.பி. என்றால் அது அப்பட்டமான அதிகாரத்துஷ்பிரயோகம்.

கவனிக்க. இது ஒரு வியாபாரம். இதில் ஈடுபடுவது அவரவர் விருப்பம். சட்டத்திற்கு உட்பட்டு எவருக்கும் எந்த வியாபாரத்தையும் நடத்துவதற்கு உரிமை உண்டு. இங்கு பிரச்சினை அதுவல்ல, மக்கள் கொடுத்த எ.பி என்கிற சலுகையை வைத்து ஒரு கூட்டம் சுய இலாபம் ஈட்டியதுதான். இதுதான் தவறு, பிரச்சினை! மேலே சொன்னது பாதிப்பேருடைய விசனம் தான் இல்லையா. அப்படியென்றால் மீதிப் பாதிப்பேரும் எதற்காக கோபப்படுகிறார்கள் என்று நினைக்கிறீர்கள்?

**சமூக அக்கறை தான்!**

இதைப் புரிந்து கொள்வதுதான் கடினமாக இருக்கிறது. மதுபானச் சாலை சமூகத்தைக் கெடுக்கும் என்கிற நம்பிக்கை. அப்படியென்றால் மதுபானச்சாலைகள் இல்லாத ஒரு சமூகத்திலிருப்பவர்கள் அத்தனை பேரும் யோக்கியர்களா என்று கேட்டால் நம்மை பைத்தியக்காரன் என்பார்கள். இதையே சமூகச் சீர்கேடு என்று சொல்லும் நம்முடைய சமூகத்தில் பிறந்து இப்போது வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுடைய கால்களுக்குள்ளும் கைகளுக்குள்ளும் கிடக்கும் அங்காடிகளில் குளிர்பானப் போத்தல்களுக்கு அருகில் அத்தனை மதுபான வகைகளும் 'ராக்கைகளில்' இருக்கும், ஏன், தமிழர்கள் நடத்தும் ஆயிரக்கணக்கான கடைகளிலும் இப்படித்தான். அப்படியென்றால் இந்தத் தமிழர்கள் எந்தச் சமூகத்தைச் சீரழித்துக்கொண்டிருக்கிறார்கள்?

இலங்கையைத் தவிர வேறு எந்த நாட்டில் போய் குடிக்க வேண்டும் என்றால் நம்மிடம் இருக்கவேண்டியது இரண்டே இரண்டு தகுதிகள்தான். ஒன்று குடிக்க வேண்டும் என்கிற சுய முடிவு, இரண்டு பையில் பணம். அவ்வளவுதான். மது அருந்தாதே அது உடல் நலத்துக்குக் கேடு, அல்லது பொறுப்போடு மது அருந்து (drink responsibly) என்பதைத்தான் சமூகம் சொல்லிக்கொடுக்க வேண்டுமே தவிர, சாராயக்கடைகளை இல்லாமல் செய்வதல்ல.

ஒரு புத்தகக்கடை அந்த ஊரில் இருக்கும் மக்களை அறிவாளிகளாக்காது. அறிவாளிகளாக்கும் என்று நாம் நம்புவதும் கிடையாது. ஆனால் ஒரு மதுபானக்கடை அத்தனை பேரையும் குடிகாரர்களாக ஆக்கிவிடும். இவ்வளவுதான் நம் நம்பிக்கை.

எங்களூரில் பல வருடங்களாக மதுபானக் கடை இல்லாமலிருந்தது. அதனால் நாங்கள் அத்தனை பேரும் மகாசகாயர்களாக மாறிப்போனோமா?

இந்தக் காலத்தில் மது அருந்துபவர்களில் ஒருவர்கூட மதுபானக் கடை இல்லை என்பதால் மது அருந்துவதை நிறுத்தவில்லை. மாறாக, இருபது கிலோ மீற்றர் வரை போய் வாங்கிவந்து குடித்தார்கள். போதாமல் போனால், குடிக்காத ஒருவனை மறுபடியும் 20 கிலோ மீற்றருக்கு மோட்டார் சைக்கிளில் அனுப்பி இன்னொரு தரம் வாங்கிவர வைப்பார்கள். (இந்தப் பயணத்தில் பல விபத்துகளும் நடந்திருக்கின்றன.) தவிர, அடிக்கடி இவ்வளவு தூரம் போய் மது வாங்கிவரவேண்டும் என்பதால் ஒவ்வொரு முறை போகும்போதும் அளவுக்கு அதிகமாக வாங்கி வருவார்கள். அவற்றை வீடுகளில் பதுக்கி வைப்பார்கள். மறுநாள் 'அட சரக்கு இருக்கிறதே' என்று மீண்டும் குடிப்பார்கள்.

> **இது ஒரு வியாபாரம். இதில் ஈடுபடுவது அவரவர் விருப்பம். சட்டத்திற்கு உட்பட்டு எவருக்கும் எந்த வியாபாரத்தையும் நடத்துவதற்கு உரிமை உண்டு. இங்கு பிரச்சினை அதுவல்ல, மக்கள் கொடுத்த எ.பி. என்கிற சலுகையை வைத்து ஒரு கூட்டம் சுய இலாபம் ஈட்டியதுதான். இதுதான் தவறு, பிரச்சினை!**

இதைவிட, இன்னுமொரு சமூகப்பொருளாதார மாற்றமும் நடந்தது. கையில் கொஞ்சம் பணமுள்ள புத்திசாலிகள் மதுப் போத்தல்களை வாங்கி வீடுகளில் வைத்து விற்றார்கள். இருபது கிலோ மீற்றர் போவதற்கு நேரமில்லாதவர்கள் இந்தப் புத்திசாலிகளுக்கு நிரந்தர வாடிக்கையாளர்களாகிப்போனார்கள். கிட்டத்தட்ட இரண்டு மடங்கு விலை கொடுத்து வாங்கிக் குடித்தார்கள்.

சீப்பை ஒளித்து வைத்துவிட்டால் திருமணம் நின்றுவிடும் என்கிற கதை போன்றதுதான் பார்கள் இல்லாவிட்டால் குடிப்பழக்கமும் இல்லாமல் போய்விடுமென்ற நம்பிக்கை. ஆகவே, ஆரம்பத்தில் நான் சொன்ன இரண்டு காரணங்களுக்காக எதிர்ப்புத் தெரிவிப்பது நியாயம். தர்மம். ஆனால், சாராயக்கடைகளால் மட்டும் தான் தமிழ் சமூகம் சீரழியப் போகிறது என்கிற அதர பழசான சித்தாந்தத்தை 2024இல் நம்பிக்கொண்டிருப்பது அபத்தமாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஜனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பிலிருந்து சிவில் சமூகங்கள் கற்றுக் கொள்ளவேண்டிய பாடம் அது. முழுநேர அரசியற் செயற்பாட்டாளர்களைக் கொண்ட, அர்ப்பணிப்புமிக்க ஒரு அரசியல் இயக்கம் தான் இப்பொழுது தமிழ்மக்களுக்கு தேவை. அந்த அரசியல் இயக்கத்தால் வழி நடத்தப்படும் ஒரு தேர்தல் அரசியலே தமிழ் மக்களை சரியான வழியில் செலுத்தும்.

சிவில் சமூகங்கள் பேராசிரியர் ஜெயதேவ உயங்கோட கூறுவதுபோல அரசியல் சமூகத்தின் மீது "தார்மீகத் தலையீட்டைச்"செய்யலாம். ஆனால் தேர்தல் நடவடிக்கைகளில் கட்சிகளைப்போல ஈடுபடுவது என்றால் அதற்கு அரசியல் இயக்கங்கள்தான் பொருத்தமானவை. சிவில் சமூகங்கள் எப்பொழுதும் தளர்வான கட்டமைப்பைக் கொண்டவை. சிவில் சமூகங்களில் பல்வேறு வகையினர் இருப்பார்கள். அரசு சார்பற்ற நிறுவனங்களின் நிதியில் இயங்குபவை, தூதரகங்களோடு உறவை வைத்திருப்பவை, கட்சிகளோடு நேரடியாகச் சம்பந்தப்பட விரும்பாதவை, கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று தமது யாப்பில் எழுதி வைத்திருப்பவை...போன்ற பல வகைப்பட்ட சிவில் சமூகங்கள் உண்டு.

இவ்வாறான சிவில் சமூகங்களின் கூட்டுக் கட்டமைப்பாக உருவாக்கப்பட்ட தமிழ்மக்கள் பொதுச்சபையானது ஒரு தேர்தல்மைய அமைப்பு அல்ல என்பதனை அந்த அமைப்பின் பிரதான நிகழ்வுகளின் போதும், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்ட பொழுதும் மிகத் தெளிவாகத் திரும்பத் திரும்ப கூறப்பட்டது. தமிழ்மக்கள் பொதுச்சபையின் உத்தியோகபூர்வ ஆவணங்கள் எல்லாவற்றிலும் அதைக் காணலாம். இந்த வரையறை தான் ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து இரண்டு நாட்களில் அறிவிக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலை கையாளமுடியாது என்று தமிழ்மக்கள் பொதுச்சபை அறிவிக்க முக்கியமான காரணங்களில் ஒன்று.

சிவில் சமூகங்களின் கூட்டிணைவு ஒரு தளர்வான அமைப்பாகவே இருக்கும். அது கட்சிபோல செயற்பட முடியாது. கட்சிபோல செயற்படுவதென்றால், அல்லது தேர்தலில் நேரடியாக ஈடுபடுவது என்றால், அதற்குப் பலமான அரசியல் இயக்கம் தேவை.

சிவில் சமூகங்களுக்கு ஊடாக தம்மை பலப்படுத்திக் கொண்டு கட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் உண்டு. அப்படிப்பட்டவர்கள் சிவில் சமூகங்களில் இருந்து விலகி கட்சிகளில் இணைந்துதான் தேர்தல் கேட்டார்கள். சிவில் சமூகங்களின் பிரதிநிதிகளாக தேர்தல் கேட்கவில்லை. எனவே இந்த இடத்தில் தெளிவான பிரிகோடு இருக்கவேண்டும் என்று தமிழ் மக்கள் பொதுச்சபை ஏற்கனவே திரும்பத்திரும்பத் தெரிவித்திருந்தது.

இப்படிப்பட்டதோர் கட்சி மற்றும் சிவில் சமூகப் பின்னணிக்குள், தேர்தல் முடிந்த கையோடு, கட்சிகளை ஒரு மேசையில் அமர்த்த சிவில் சமூகங்கள் எவையும் முயற்சிக்காத ஒரு வெற்றிடத்தில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதாவது ஜனாதிபதித் தேர்தலின்போது ஐக்கிய முயற்சிகளுக்கு எதிராக காணப்பட்ட கட்சி, ஒரு புதிய ஐக்கிய முயற்சிக்கு அழைப்பு விடுத்திருக்கின்றது. தேர்தல் முடிவுகளில் இருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் அந்த அழைப்பு வந்திருக்கலாம். அவர்களுக்கு நெருக்கமான சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் ஆலோசனையும் அதற்குக் காரணமாக இருக்கலாம்.

எதுவாயினும் முன்னணியின் ஐக்கியத்துக்கு எதிரான முன்னைய நிலைப்பாடுகளை தூக்கிப்பிடிக்க இது நேரமல்ல. கஜேந்திரகுமாரின் அழைப்பு காலத்தின் தேவை. கட்சிகளை ஒருங்கிணைக்கும் பணியில் கட்சிகளின் மீது செல்வாக்கை பிரயோகிக்கக்கூடிய மக்கள் அமைப்புகள் இல்லாத ஒரு வெற்றிடத்தில், ஒரு கட்சியே முன்வந்து அந்த அழைப்பை விடுப்பது தவிர்க்கமுடியாதது. இறந்த காலத்தில் இருந்து அந்தக்கட்சி பாடங்கற்றிருப்பதை வரவேற்கலாம்.

ஒரு ரஷ்ய பழமொழி உண்டு "கடவுளுக்கு உள்ள பிரதான பிரச்சினை என்னவென்றால், மனிதர்களை வைத்துத் தான் எல்லாவற்றையும் செய்யவேண்டியிருப்பது" என்று. தமிழ் அரசியலுக்கும் அது பொருந்தும். இருக்கிற கட்சிகளை வைத்துச் சாத்தியமான ஐக்கியத்தைத்தான் கட்டியெழுப்பலாம். மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தோடு இருக்கும் என்.பி.பி. அரசாங்கம் ஒரு தீர்வை நோக்கி முயற்சித்தால், அதை எதிர்கொள்ள அப்படியொரு சாத்தியமான ஒருங்கிணைவு அவசியம்.

# அதானியை சூழும் ஆபத்து

மயூ

அதானி குழுமம் இலங்கையிலும் சில திட்டங்களை ஆரம்பிக்கவுள்ள நிலையில் இந்தக் குற்றச் சாட்டுக்கள் இங்கும் பேசு பொருளாகியிருக்கின்றன.

இந்தியக் கோடீஸ்வரர் கௌதம் அதானி மற்றும் அவரது குழுமத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் மீது அமெரிக்காவில் இலஞ்சக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்தியாவில் அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் சில ஒப்பந்தங்களைக் கைப்பற்ற இந்திய அதிகாரிகளுக்கு 250 மில்லியன் டொலரை இவர்கள் இலஞ்சமாகக் கொடுத்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இலஞ்ச விவகாரத்தை மறைத்து அமெரிக்க மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களிடம் பத்திரங்கள் மற்றும் கடன் மூலம் சுமார் 3 பில்லியன் டொலர் திரட்டப்பட்டுள்ளது என்றும் சொல்லப்படுகின்றது. அதானி குழுமம் இலங்கையிலும் சில திட்டங்களை ஆரம்பிக்கவுள்ள நிலையில் இந்தக் குற்றச்சாட்டுகள் இங்கும் பேசுபொருளாகியிருக்கின்றன.

இது ஒரு மோசடி என்கிறது அமெரிக்காவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகை. கௌதம் அதானி உள்ளிட்டோருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று கூறுகின்றன சர்வதேச ஊடகங்கள். ஆனால், அமெரிக்க நீதிமன்றத்தின் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை என நாங்கள் நிரூபிப்போம் என்று அதானி குழுமம் கூறுகின்றது. இந்தியாவில் அதானி குடும்பம், தற்போதைய பிரதமர் நரேந்திரமோடியுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கின்றது என்பது பரவலான குற்றச்சாட்டு. அந்த நெருக்கத்தைக் கொண்டே பல ஒப்பந்தங்களை அதானி குழுமம் பெற்றுக்கொண்டிருக்கின்றது என்ற கருத்து வைக்கப்பட்டிருந்தநிலையில், அமெரிக்காவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகை இந்தியாவில் மோடி எதிர்ப்பாளர்களின் வெறும் வாய்க்கு அவல் கிடைத்தது போலாகியிருக்கின்றது.

அமெரிக்காவில் எழுந்துள்ள இந்தக் குற்றச்சாட்டுகளின் தாக்கம் இந்தியப் பங்குச்சந்தையில் மட்டுமன்றி பல இடங்களிலும் பிரதிபலிப்புகளைக் காட்ட ஆரம்பித்திருக்கின்றது. கௌதம் அதானி மீது மோசடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட உடனேயே அவரது சொத்து மதிப்பில் 15 பில்லியன் டொலர் வரை குறைந்துள்ளது என்கின்றன பங்குச் சந்தை நிலைவரங்கள். அதுமட்டுமன்றி கென்யாவின் ஜனாதிபதி வில்லியம் ரூட்டோ திடீரென விமான நிலைய விரிவாக்கம் மற்றும் எரிசக்தி ஒப்பந்தத்திற்காக கௌதம் அதானியுடன் கையெழுத்திட்ட பில்லியன் டொலர் ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதாக அறிவித்திருக்கின்றார். இந்த நிலைமை இன்னும் விரிவாகலாம்.



இந்தக் குற்றச்சாட்டுகளின் தீவிரம், குற்றச்சாட்டுகளால் எழுந்துள்ள நிலைமை என்பவற்றைப் பார்க்கும்போது இந்தவிவகாரம் இலகுவில் தீர்ந்துவிடப்போவதில்லை என்றே தெரிகின்றது. இலஞ்சம் பெற்றவர்கள் என்று கூறப்படுபவர்கள் இந்தியாவில் இருக்கின்றனர் என்று கருதப்படும் நிலையில், குற்றச்சாட்டுகளை நிரூபிப்பது இலகுவாக இருக்காது என்கின்றனர் சட்டத்துறை சார்ந்த நிபுணர்கள். இந்தியாவில் உள்ளவர்களிடம் அமெரிக்க அதிகாரிகள் வாக்குமூலம் பெறுவதில் இருந்து, குற்றஞ்சாட்டியவர்களில் யாராவது அரச அதிகாரிகளாக இருந்தால் அரசாங்கத்திடம் விசாரணைக்கு முன்அனுமதி பெறுவது வரையில் கடும் சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். கடந்த வியாழக்கிழமை நடந்த இந்திய நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலும் இந்தவிவகாரம் எதிரொலித்தது. இந்தவிவகாரத்தில் நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணைக்கு உத்தரவிட வலியுறுத்தி எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். "மோடியும் அதானியும் ஒன்று" என்ற ஆடை அணிந்து நடத்திய போராட்டத்தின்போது கருத்துத் தெரிவித்த ராகுல் காந்தி "அதானி மீது விசாரணை நடத்த பிரதமர் நரேந்திர மோடி அனுமதிக்கமாட்டார். அதானி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டால் தானும் விசாரணைக்குள் சிக்க நேரிடும் என்று அவருக்குத் தெரியும்" என்று கூறியிருக்கின்றார்.


இந்த விவகாரம் அதானிக்கு மட்டுமன்றி பிரதமர் மோடிக்கும் சிக்கலாக மாறக்கூடும். இந்த விடயத்தை வைத்து பிரதமர் மோடியை இலக்கு வைக்க எதிர்க்கட்சிகள் நிச்சயம் முயலும். ஆகையால் இந்த விவகாரம் நாள் செல்லச் செல்லச் சூடுபிடிக்கும் என்றே எதிர்பார்க்கலாம். அதானி குழுமம் இலங்கையில் அதிலும் வடக்கில் தனது திட்டங்களுக்கான ஒப்பந்தங்களைப் பெற்றிருக்கும் நிலையில் இந்த விவகாரத்தின் போக்கை உன்னிப்பாகக் கவனிக்கவேண்டிய தேவை இலங்கைக்கும் இருக்கின்றது.

# கூட்டுறவுக்கு பெரும் சேவையாற்றிய பெரியார் வீரசிங்கம்

நந்தன்

கூட்டுறவுச் சேவையையும் சமூகசேவையையும் தனது ஆயுட்காலம் வரை பாரம்பரியமாகக் கொண்டு செயற்பட்டவரே இலங்கையின் கூட்டுறவு இயக்கத்தின் தந்தை பெரியார் வீரசிங்கம். இந்துமா சமுத்திரத்தில் முத்தெனத் திகழும் இலங்கைத் தீவின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத் திருநாட்டில் நீர் நில வளத்துடன் சிறந்து விளங்கும் நவாலி என்ற கிராமத்தில் கல்வியிலும் அறிவிலும் நற்பண்புகளிலும் சிறந்து விளங்கிய விஸ்வலிங்கம் அன்னம்மா தம்பதியினரது தவப்புதல்வராக 1892 ஆம் ஆண்டு ஆடி மாதம் 7 ஆம் திகதி வீரசிங்கம் அவதரித்தார். இவர் சிறுபராயத்திலிருந்து கல்வியில் சிறந்து விளங்கினார். ஆரம்பக் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கற்றார். பாடசாலையில் கல்வி கற்ற காலங்களில் கல்வி மற்றும் விளையாட்டு சம்பந்தமான போட்டிகளில் வென்று பரிசில்களைப் பெற்றார். சுமார் நாற்பது வருடங்களாக ஆசிரியராகவும் கல்லூரி அதிபராகவும் பணியாற்றியதன் மூலம் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய சமூகத் தொண்டர்களையும் கல்விமான்களையும் உருவாக்கி சமூக அபிவிருத்திக்கான பரந்த களமொன்றை சமுதாயத்தில் ஏற்படுத்தியிருந்தார்.

கல்விப் போதனை மூலம் அறிவும் நற்பண்பும் நிறைந்த ஆயிரக்கணக்கான நற்பிரஜைகளை உருவாக்கி சமூகத்தை நவீனமயப்படுத்த அரும்பணிகளைப் புரிந்தார்.



## மது ஒழிப்பு

சமூக அமைதியின்மைக்கும் மக்களின் வருமான இழப்பிற்கும் மக்களிடையே காணப்படும் மதுப் பழக்கம் முக்கியமான காரணமாகும். இதனை அவதானித்த வீரசிங்கம் மதுப் பழக்கத்தை ஒழிப்பதற்கு 1920 ஆம் ஆண்டு மது ஒழிப்பை பிரகடனப்படுத்தி மது ஒழிப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டார். மதுப் பழக்கத்தினால் ஏற்படும் தீமைகளையும் அதனை நீக்கவேண்டிய அவசியத்தையும் பற்றி மக்களிடையே தீவிர பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டார். மதுப் பழக்கத்திலிருந்து மதுப் பாவனையாளர்களை விடுவித்து சமூகத்தில் நற்பிரஜைகளாக அவர்களை உருவாக்குவதற்கு அயராது செயற்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினராக 1952 ஆம் ஆண்டு இடம் பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு அமோக வெற்றிபெற்றார். இதன்மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான இலங்கையின் முதலாவது கூட்டுறவாளர் என்ற புகழையும் பெற்றார். நாடாளுமன்றத்தில் அவர் நிகழ்த்திய உரைகளும் விவாதங்களும் அவரின் முதிர்ந்த அரசியல் அறிவையும் ஞானத்தையும் வெளிப்படுத்துவனவாக அமைந்தன.

## கிராம வளர்ச்சி


கிராமங்கள்தோறும் சிறுகைத்தொழில் உற்பத்திகளை மேற்கொள்வதற்கான வழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தினார். இதற்காக பாடசாலைகள், சமூக அமைப்புகள் மூலம் கைப்பணிப் பயிற்சிகளையும், கைப்பொருள் கண்காட்சிகளையும் ஒருங்கமைத்து கிராமிய உற்பத்திப் பொருட்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். இதனால் கிராம மக்கள் பெரிதும் நன்மை அடைந்தனர்.

கூட்டுறவே நாட்டுயர்வு என்ற கூட்டுறவுப் பண்பிற்கு அமைய இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தை உருவாக்கவும், வெற்றிபெறச் செய்யவும் அவர் மேற்கொண்ட அளப்பரிய தியாகங்களையும் கூட்டுறவாளர்கள் நன்கறிந்திருப்பார்கள். கூட்டுறவு நலனுக்காகத் தன்னை அர்ப்பணித்து தியாகங்களையும் புரிந்து மக்களின் இதயக்கமலத்தில் கலங்கமற்ற நிலையான இடத்தை பெற்றுக்கொண்ட ஒரேயொரு கூட்டுறவுத் தந்தை பெரியார் வீரசிங்கம் ஆவார். அவர் இன்று இந்த மண்ணை விட்டு மறைந்து 60 ஆண்டுகள் கடந்தாலும் அவரது புகழுடல் கலங்கரை விளக்கமாகப் பதிந்து சாகாவரம் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கை.மேதகைலாஷ்
தரம் - 4F
யா/கைலாநாத வேதசிவாகம
அறநெறி பாடசாலை



எஸ்.கஜீஷா
தரம் - 8E
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை

## மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555




B.மஹேபன்
தரம் - 8D
யா/மானிப்பாய்
இந்துக் கல்லூரி.








ர.ரிஷிகேசசர்மா
தரம் - 8G
கொக்குவில்
இந்துக்கல்லூரி


பி.கவிஷன்
தரம் - 7E
யா/சென்.ஜோண்ஸ்
கல்லூரி.

சு.கிரித்கன்
தரம் - 9
புனித/பத்திரிசியார் கல்லூரி






சி. பிரவீன்
தரம் -7
யா மானிப்பாய்
இந்துக் கல்லூரி



T.வித்திகா
அம்பாள்
ஆரம்பப் பாடசாலை



S.டிஷான்
தரம் -7
யா/மத்திய கல்லூரி



சி.பூர்விக்ஹா
தரம் -4 B
யா/புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org